


# மனிதத்தைத் தேடி...

நெடுந்தீவு மகேஷ்

# மனிதத்தைத் தேடி...



நெடுந்தீவு மகேஷ்

## நூல் விபரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மனிதத்தைத் தேடி |
| இலக்கிய வகை | : | கவிதை |
| நூலாசிரியர் | : | நெடுந்தீவு மகேஷ் |
| உரிமை | : | ஆசிரியருடையது |
| நூலாசிரியர் முகவரி | : | 249/1, நாயன்மார் வீதி, யாழ்ப்பாணம், இலங்கை. |
| வெளியீடு | : | கதிரவன் வெளியீட்டகம் திருக்கோணமலை. |
| முதற்பதிப்பு | : | 2002 நவம்பர் |
| பிரதிகள் | : | 1000 |
| அச்சுப்பதிப்பு | : | ரெயின்போ மினிலாப் 361பி, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை. 026-23454, 0777-303938 |
| விலை | : | ரூபா. 125.00 |

## BIBLIOGRAPHY

| | | |
|---|---|---|
| Title | : | Manithathai Thedy |
| Genere | : | Poems |
| Author | : | Nedundheevu Mahesh |
| Authors Address | : | 249/1, Nayanmar Road, Jaffna. |
| Publishers | : | Kathiravan Publishers Trincomalee. |
| First Eddition | : | 2002 November |
| Printers | : | Rainbow Minilab 361B, Court Road, Trincomalee. 026-23454, 0777-303938 |
| Price | : | Rs. 125.00 |
| ISBN | : | 955-98139-0-0 |

அட்டைப்படம் : ஆசிரியர். ம.பார்த்தீபன் செதுக்கிய சவர்க்காரச் சிற்பங்கள், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

# அணிந்துரை

மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகங்களில் கவிதையைப் போன்றதொரு சிறந்த கலைவடிவம் இருக்கமுடியாது. எளிய மொழிநடையில், குறைந்த சொற்களைக் கொண்டு, பரந்து பட்ட கருத்தைப் புலப்படுத்தும் ஆற்றல் மிக்கதொரு கலைவடிவம் கவிதைதான் என்பதை 'நெடுந்தீவு மகேஷ்' தனது முதற் கவிதைத் தொகுப்பான "மனிதத்தைத்தேடி" என்ற நூல் மூலம் காட்டியுள்ளார்.

"உலகம் அழுகிறதே
உண்பதற்கோ கஞ்சியில்லை
கலகம் நிறைகிறது
கைகலக்கும் ஆயுதங்கள்
புலராச் சமாதானம்
புரட்டோலம் போர்முழக்கம்"

என்ற பாடல் அடிகளால் போர் முழக்கம் செய்வதில் நாடுகள் காட்டும் ஆர்வம், சமாதானத்தைக் கொண்டு வருவதில் இல்லையென்ற அந்த உண்மையை உணர்த்தும் வகையில் "இன்னுணவாய் மாற்றிடுவீர்." என்ற கவிதையினூடாக எடுத்துக்காட்டும் பாங்கு மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது.

உலகில் கோடிக்கணக்கான மக்கள் உடுப்பதற்கு ஆடையின்றியும் உண்பதற்கு உணவின்றியும் அல்லலுறும் போது உலகின் வல்லரசுகள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் நாடுகளோ ஆயுதக் கொணர்வுக்கும், அணு ஆயுதத் தயாரிப்புகளுக்கும் எனக் கோடிக்கணக்கான ரூபாக்களைச் செலவு செய்து கொண்டு, போலியாக சமாதானம் பற்றி ஓதுவது தான் வேடிக்கை இத்தகைய போலிகளின் உண்மைச் சொருபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் நெடுந்தீவு

மகேஷின் கவிதைகள் நறுக்குத் தெறித்தாற் போல் நெஞ்சைச் சுண்டி இழுக்கின்றன.

"ஒரு ஆன்மாவின் அக உணர்வின் உணர்ச்சி வெளிப்பாடே கவிதை" என்பதற்கு அமைய நெடுந்தீவு மகேஷ் தன் வாழ்நாளின் உணர்ந்து அனுபவித்த அன்பு, பாசம், ஏமாற்று, போலித்தனம், அரசியல் வேடதாரிகளின் கபடத்தனம், பிரிவு, துயரம், சாந்தி என்ற பல்வேறு புற உணர்வுகளின் வெளிப்பாட்டைக் கவிதைகளினூடாக வெளிப்படுத்தியிருக்கும் நுட்பம், வித்தியாச மானதாக உள்ளது.

மலைபோல் நிமிர்ந்து நின்று கலங்காத மகேஷை நிலைகுலையச் செய்யும் சோகங்களைக் கூட அவரது கவிதைக் கனலான "மனிதத்தைத் தேடி" என்ற நூல் மறக்கப் பண்ணியிருக்கும் "கவிதை என்னுள் உயிர்ப்போடு விளைந்த போது துயரங்களை மறந்தேன். தொடரும் வெற்றிகளுக்கெல்லாம் வலிமை சேர்த்தேன்."

என்ற அந்த வாசகங்கள் மீண்டும் மீண்டும் கவிதைகளைப் படைக்க வேண்டும் என்ற உந்துதலையும், நிலையில்லாத உலகில் நின்று நிலைக்கக் கூடிய ஏதேனும் சாதனைகளைப் படைக்க வேண்டும் என்ற உறுதியையும் வெளிக்காட்டி நிற்பதாக உணருகிறேன். அவரது கவிதைகளைப் படிக்கும் பொழுது குனிந்த எமது தலைகள் கூட ஒரு கணம் நிமிர்ந்து மீண்டும் ஒரு 'புறம்' பாடத் துடிக்கின்றது!

ஆம்!........ மீண்டும் ஒரு புறம் பாடக் களமும், வழியும் அமைத்துக் கொடுத்து விட்ட ஒரு உணர்வை நெடுந்தீவு மகேஷின், "மனிதத்தைத் தேடி" என்ற கவிதை நூல் என்னுள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது......... உங்களுக்கும் அப்படித்தானே!

**தெணியம்பைத் தெரு** — **அன்பன்**
**வல்வெட்டித்துறை** — **வல்வை. ந.அனந்தராஜ்**

# என் உள்ளத்திலிருந்து.

கவிதை ஓர் ஆயுதம் என்பதை நான் உணர்ந்து கொண்டபோது அதன் வலிமையை நான் பெற்றுக் கொண்டேன். கவிதை என்னுள் உயிர்ப்போடு விளைந்த போது துயரங்களை மறந்தேன். தொடரும் வெற்றிகளுக்கு வலிமை சேர்த்தேன்.

பத்திரிகைகள் என் கவிதைகளைப் பிரசுரித்த போது நான் மகிழ்ந்திருந்தேன். காலத்திற்குக் காலம் என் கவிதைகள் அரங்கேறியபோது நான் ஆனந்தித்தேன். இன்று புத்தகம் போட அவற்றைத் தேடிய போது கண்டடையாது ஏமாந்தேன். உள்ளம் நொந்தேன். நான் சேர்த்து வைத்த அக் கவிதைச் செல்வம் போரினாலும், இடப்பெயர்வுகளாலும் அழிந்து போனதை எண்ணி வேதனைப்பட்டேன்.

புத்தகம் போடுதல் என்பது எத்துணை கடினமானது என்பதை எண்ணி எண்ணியே இத்தனை நாட்களும் அதற்கென முயலாதிருந்தமையால் ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிதான போது என் வேதனை எல்லை கடந்தது.

எங்கெங்கோ தேடி எனது ஆக்கங்கள் சிலவற்றைக் கண்டெடுத்தபோது "புத்தகம் போடு" என்று என்னை ஊக்கிய என் நண்பர், எழுத்தாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் அவர்களை என்னால் மறக்க முடியாது. ஏனெனில் இப்புத்தகத்துள்ளும் அவரின் ஆளுமை மிகு தோற்றம் பொலிந்து தெரிவதாக உணருகிறேன்.

என் கவிதைகளைப் பிரசுரித்த பத்திரிகைகளை விடக் கைவசம் உள்ள கவிதைகள் மிகச்சிலவே என்பதை எண்ணித் துயருறுகின்றேன்.

செ.மகேந்திரன் என்ற புனைப் பெயரில் நான் கவிதை எழுத ஆரம்பித்த பொழுது எனக்கு ஊக்கம் தந்த சசிபாரதி (எஸ்.சபாரத்தினம்) அவ்வேளை ஈழநாடு ஆசிரியர் குழுவில் பணியாற்றி வந்தார். அவருடைய ஒத்துழைப்பும் ஊக்கமும் பெரிதும் என்னைக் கவிதை உலகிற் சிறக்கச் செய்தன.

அவ்வாறே தொழிலாளி, தேசாபிமானி, யுவசக்தி ஆகிய பத்திரிகைகளில் எனது ஆக்கங்கள் வெளியாகிய போது பாராட்டுக்கள் தெரிவித்து ஊக்கம் தந்த அமரர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களையும் நான் என்றும் என் நினைவில் வைத்துள்ளேன்.

சிந்தாமணி, தினபதி, பத்திரிகைகளில் எனது கவிதைகளைப் பிரசுரித்து மேலும் மேலும் என்னை எழுதத் தூண்டிய காலஞ்சென்ற பத்திரிகையாளர் எஸ்.டீ.சிவநாயகம் அவர்களை என்றும் ஞாபகத்தில் வைத்துப் போற்றுகின்றேன்.

மரபுக் கவிதைகள் என்றும் புதுக் கவிதைகள் என்றும் பாகுபடுத்திச் சுவைத்துக் களிக்கும் இன்றைய வாசகர் மத்தியில் நானும் ஒரு வாசகனாக இருப்பதனாலேயே கவிஞனானேன் என்பது எனது துணிவான வெளிப்பாடு.

நெடுந்தீவு மகேஷ், வேதா மகேஷ், நெடுந்தீவான், மாவுறையூர் மகேந்திரன், மாவுறையூரான் என்ற புனை பெயர்களில் நான் எழுதிய கவிதைகள் பலவும் வெளிவந்தன-வெளிவந்து கொண்டிருக்கின்றன.


மரபும் புதுமையும் வாழ்க்கையில் வெளிப்படும் உண்மைகளே. கவிஞனின் ஆளுமைக்குள் வார்த்தைகள் இருக்கும்போது வாழ்க்கையும் அதன் வடிவங்களும் கவிதைகளாகி விடுகின்றன.

என்னை நானாகத் திகழ வைத்திருக்கும் கவிதைகளின் தொகுப்பை உங்கள் முன்வைக்க என்னை ஊக்குவித்த யாவருக்கும் இக் கவிதை நூலைச் சிறப்புறப் பதிப்பித்து வெளியிட்ட கதிரவன் வெளியீட்டகத்தாருக்கும் எனது மனம் நிறைவான நன்றிகளைக் கூறி "மனிதத்தைத் தேடி" என்னும் எனது கவிச் சோலைக்குள் உங்களை வரவேற்கின்றேன்.

-செ.மகேஷ்-
249/1, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## என் இனிய இளைய மகள் உமாபாரதிக்கு

மண்ணில் எமதுறவாய் மலர்ந்த புதுமலரே;
எண்ணில் கலைவடிவாய் எம்முன் வளர்ந்தவளே;
விண்ணில் உயர்ந்துயிராய் விளங்கும் அருளொளியே;
கண்ணே உமா, உமக்கென் கவிகள் சமர்ப்பணமே.



# கவித்தேன் படையல்

உள்ளத்திற் கொளியூட்டி
உவப்பான இன்தமிழில்
வெள்ளமென வாக்கினொளி
விளங்கவைத்த தாய்நிலத்தே,

என்னை நானாக்கி
என்கவியைத் தேனாக்கி
அன்னைத் தமிழை
அரியாசனத் திருத்தி,

அலங்கரிக்கும் நற்பணிக்கு
அடியேன் அடியெடுக்க
இலங்கும் வகை கனிந்த
இதயம் அளித்தாரென்

பெற்றோர் அவர்நெறியில்
பெரியோன் எனமிளிரக்
கற்றோர் குருதெய்வம்
காட்டும் நலம்தொடர,

வகுத்தேன் புதியவழி
வாழ்வே கருப் பொருளாய்
தொகுத்தேன் கவித்தேன்
படைத்தேன் உமக்களித்தேன்.

# மனிதத்தைத் தேடி

பூக்க விதைத் தேனிந்தப்
பூவிதனைப் புதிதாக்கும்
பூக் கவிதைத் தேன்படையல்
பூந்தமிழாள் நெஞ்சமெலாம்
பூக்க விதைத்தேன் நலங்கள்
பூரிக்கப் பூக்கட்டும்.

# வாழ்க தமிழே!

வாழ்க எழில்நிறை வையக மெங்கணும்
வழங்கிடு நற்றமிழே.

வளர்கலை வீரம் விளங்கிட நல்லறம்
வளர்த்திடு தண்மொழியே.

மூழ்பகை தீய்ந்து முறைமுறை நற்பணி
முயன்றுழை செந்தமிழே.

நீள்கஇன் னன்பு நிலைக்க ஒளிதரு
நீதியின் தாய்மொழியே.

தூள்படத் தொல்லை தொடரிடர் துன்பம்
தொலைத்திட வாழ்மொழியே.

யாழ்நகர் வன்னி திருமலை மட்டு
யாங்கணும் ஆள்மொழியே.

வாழ்கநின் தொன்மை வசந்தம் இளமைசீர்
வளந்தரு தேன்மொழியே.

சூழ்கடல் ஆர்க்கத் சுதந்திரம் பூக்க
சுடர்க தமிழ்மொழியே.

# அன்னையென்னும் தெய்வம்.

தித்திக்கும் மாங்கனியும் - சுவைமிகும்
தேன்கத லிப்பழமும்
நித்தம் இனித்திடுமோ - அன்னைமொழி
நின்று சுவைப்பது போல்.

இன்னிசை மெல்லிசைகள் - தென்றலின்
இராக ஆலாபனைகள்
அன்னை தாலாட்டொதுக்கி - உயர்ந்திடும்
ஆற்றல் சிறந்தனவோ.

முத்தமழை பொழியும் - ஆயிரம்
மோகன மான்விழி கொள்
பத்தினிகள் இணையோ அன்னைமென்
பாசஅணைப் பதுபோல்

மஞ்சள் நிலாவழகும் - செந்தாமரை
மலரும் பொழுதழகும்
விஞ்சிடுமோ திருத்தாய் - சிந்துநல்
வெற்றித் திருநகையை

அமுதச் சுவைப் பெருக்கும் - இந்தநல்
அகில நிறையுணவும்
குமுத வதனமொளிர் - தாய்தரு
கூழ்ச்சுவை மேவிடுமோ.

தாயில் உயர்ந்ததெது? - மாபெரும்
தாரணி தாய்க்கடிமை.
கோயிலிற் தெய்வமவள் - என்மனக்
கோட்டையின் ஆட்சியவள்.

# இறைவன் நீரே

வந்தநாள் தொட்டிங்கு வாழுநாள் யாவுமென்
வாழ்விலே ஒளி விதைத்தீர் - உம்தம்
சொந்தமும் உழைப்புயர் சுகங்களும் ஈய்ந்துயர்
சுதந்திரம் எனக்களித்தீர்.

பள்ளியில் நானுயர் கல்வியில் மேம்பட
பற்றுடன் வழி காட்டினீர் - சிறு
பிள்ளையாய் பெரியனாய் நான்வளர் காலையில்
பேணிநல் நெறி உரைத்தீர்

கற்றவர் மற்றவர் போற்றிடப் புனிதனாய்
கருத்துடன் புகழ் வளர்த்தீர் - எனைப்
பெற்றவள் தம்மொடும் அன்பிலும் பண்பிலும்
பிரியமாய் அறிவூட்டினீர்

இருளிலா முழுநிலா இசைமொழி இன்னுரை
இன்பமே நிறைவு தந்தீர் - செல்வம்
பொருளெலாம் நீர்செல்லத் தம்பியென் சிந்தனை
பொலிவுற உறவுதந்தீர்.

தந்தைநீர் தந்தனை தளர்விலா உயிருடல்
தருமமும் வாழ்வும் நீரே - என்றும்
எந்தைநீர் இல்லையேல் நானில்லை என்பதை
எண்ணினேன் இறைவன்நீரே.

கடிந்தெனக் குறுதுயர் கலைந்திடக் கண்டுளம்
களித்திடும் உறவு நீரே - இன்றே
முடிந்திடும் வாழ்விதன் மூலமும் முதன்மையும்
முழுமையும் உலகும் நீரே.

- நவமணி -

# குறளொனும் வேதம்

அகர முதலாந் தமிழெடுத்து - நல்
அணிசெய் தமுதக் குறள் யாத்து
சிகரத் தேற்றித் தமிழ்மாதை - புகழ்
செழித்திட வைத்த வள்ளுவனை
பகரின் பெருகும் அறிவூற்று - குறள்
படிக்கிற் பெருகும் கருத்தூற்று
நகரும் கொடுமை நமைநீங்கி - தினம்
நலமே நிறையும் நாடுயரும்.

ஆதிபகவன் முதற்றுலகம் - ஓர்
ஆயிரம் முந்நூற்று முப்பதவை
நீதி உரைக்கும் குறட்கோவை - நாம்
நித்தம் சுவைக்கத் தமிழ்ச்சோலை
சாதி மதங்கள் சஞ்சலங்கள் - கொடும்
சண்டைகள் தீய்ந்திட எந்நாளும்
ஓதி உயர்க புகழ் பெறுக - நல்
ஒழுக்கம் சிறக்கக் குறள்வாழி.

அறிவைப் பெறுக அறவழியில் - நல்
அன்பைப் பெறுக என்றென்றும்
வறுமை கொலை பொய் சூதாட்டம் - பகை
வஞ்சம் மதுநீ ஒழித்துவிடு
பொறுமை உழைப்பு நேர்மைபுகழ் - நற்
புலமை மனையிற் போற்றவளர்
சிறுமை சிதைத்தின் னிசைபாடு - எனச்
செப்பும் குறளே நீவாழி.

ஆண்டு பலவாய் ஆயினதோ - தமிழ்
ஆன்றோன் பொய்யா மொழிப் புலவன்
மாண்டோ போனான் இல்லை என்றும் - நல்
மருந்தாய்க் குறளுள் வாழ்கின்றான்
ஆண்டான் அடிமை அனைவோர்க்கும் - நல்
அறிவைத் தேனாய்ப் பொழிகின்றான்
வேண்டாம் நமக்குள் வீண்வாதம் - குறள்
வேதம் ஓதும் வழிவாழ்வோம்.

**- சிந்தாமணி-**

# மனிதமெங்கே

பற்றியெங்கும் எரிகிறது பயங்கரத்தீ
பார்த்திருப்பார் பலரிங்கே பரிதவிப்பார்
சுற்றியெங்கும் உயிர்கொண்டு ஓடியோடி
சுகந்தேடும் சிலநூறு சுகந்தம்நாடும்
இற்றழியும் இளமைநலம் இருட்டினூடு
இதயமிலார் போலோடும் ஆளும் நாளும்
கற்றவர்கள் கருத்துரிமை காக்கும் மேலோர்
கனிவுடைய மனிதமெங்கே தேடுகிறேன்.

போரென்றால் வளர்துன்பம் ஆக்கமில்லை
போற்றுமறம் நிலைக்காது தொலைந்துபோகும்
சீரெல்லாம் சிதைந்தழியும் விடிவு ஏது?
செய்கருமம் உறுதிகெடும் இன்பம் சாகும்
பாரெங்கும் அகதிகளாய் மக்கள் வெள்ளம்
பதைபதைத்து உயிர்பிடித்து ஊர்ந்து வாழும்
ஆரிவற்றை உடன்நிறுத்தி அமைதிகாணும்
ஆற்றலுடை மனிதமெங்கே தேடுகின்றேன்.

வெடியதிர விண்ணுயர்ந்த மண்டபங்கள்
வீழ்ந்துசரிந் துருமாறி இடிந்துமாயும்
நொடியொன்றில் மந்திரமோ உயிருடலம்
நூறுபல துகளாகிச் சிதைந்துபோகும்
ஒடிந்தினிய உயர்வழகு உணர்வு செம்மை
ஒழிந்தகலத் திகில்மூடும் உள்ளம் சோரும்
மடிந்ததுவோ மானிடத்தின் கருணையன்பு
மனிதமெங்கே மனிதமெங்கே தேடுகிறேன்

- தினக்குரல் -

# எனக்கெவரும் எதிரியில்லை.

எந்தனுக்கு எதிரியென எவருமில்லை
ஏன்? எதற்கு அவர்க்கெதிரி ஆனேன் நொந்தேன்
முந்திவந்து என்கடமை முடிக்குங்காலை
முறுவலித்தார் முதலாளி மகிழ்வு கொண்டேன்
அந்தநிலை அருகிருக்கும் அன்பர்க்கில்லை
ஆதலினால் நானவர்க்கு எதிரியானேன்.

பட்டமரம் துளிர்ப்பதற்கு நீரை வார்க்கும்
பைத்தியமாய் நானில்லை உழைப்பே தெய்வம்
கொட்டுவது கூலியது குறையும் கூடும்.
கொஞ்சமெனும் பஞ்சமில்லை நலமே வாழ்க்கை
எட்டியவர் எனை விழுத்திப் பணத்தைச் சேர்க்க
எண்ணுமவர்க் கெதிரியென ஆகிப்போனேன்

வாழ்க்கையிது தென்றல் மலர் வனம்போலாகும்
வந்ததுணை நன்றுவளர் மைந்தர் சுற்றம்
சூழ்ந்ததெலாம் சுகந்தரலால் இன்பமென்பேன்
சுதந்திரமே என்மேன்மை கண்டு பொங்கும்
காழ்ப்புணர்வு கொண்டோர்க்கோ எதிரியானேன்
கடுகளவும் எனக்கெவரும் எதிரி இல்லை.

காய்த்தமரம் கல்லெறிக்குள் ஆதல்போலாம்
காலமெலாம் என்னுயர்வைக் காழ்ப்போடாயும்
பேய்த்தனத்தார் முன்னென்றும் எதிரிநானோ
பேசாமல் இருந்திட்டால் மடையனென்பார்
நோய்த்தடுப்பாய் நானவரை நோகச்சொன்னால்
நொடிப்பொழுதில் அவர்க்கெதிரி நேரில்நானே!

# பேய் எங்கே?

எரிகின்ற பிணக்காட்டில்
இடுகாட்டிற் பேயென்றார்
எதிரிற் காணேன்.

நரியூளை இடுங்காட்டில்
பாழ்வீட்டிற் பாரென்றார்
பார்த்தேன் காணேன்.

புரிகின்ற தென்னுள்ளே
புகுந்துள்ள பேய் கோடி
புறத்தே ஏது?

திரிகின்றேன் நான் சாதித்
திமிர் கொண்ட பேய் வேறு
பேய்கள் ஏது?

அந்தியிலே நடுராவில்
ஆல்புளிற் பேயென்றார்
அங்கே காணேன்.

சந்தியிலே பஞ்சமியிற்
சாவீட்டிற் பேயென்றார்.
சாயல் காணேன்

சிந்தித்தேன் என்னுள்ளே
சேர்ந்துள்ள பேய்கோடி
சிலிர்த்ததுள்ளம்

வந்தேன் நான் பெருலஞ்சம்
வாங்கும் பேய் புறத்தேபேய்
வடிவம் காணேன்.

காரிருளில் நடமாடும்
கரியநிறம் பேயென்றார்
காணேன் ஏனோ!

பாரிற்கால் பதிக்காது
பல் நீளம் பாரென்றார்
பார்த்தேன் காணேன்.

ஊரிற்தான் உலவுகின்றேன்
உயிர்கொள்ளும் கொடும்பேய்கள்
ஒன்றும் காணேன்.

வேர்கொண்டென் உணர்வுக்கு
வெறியூட்டும் காமப்பேய்
வெளியே இல்லை.

**- சிந்தாமணி-**

# நான் தனித்தேன்

அன்பு மனைவி மென் ஆசை வளர்த்தெனக் (கு)
அருகிருந்தாள் சிரித்தாள்
தின்பதற் கென்பசித் தேவை அறிந்து நற்
தீன் கொடுத்தாள் உயர்ந்தாள் - இன்று
அன்பறியேன் பசித் தழுதலறத் தூற்றி
அகன்றிருப்பாள் கொதிப்பாள்
என் செய்குவேன் வெளிநாட்டுத் தொழில்விட்டு
ஏங்குகிறேன் தனித்தேன்.

நண்பொடு அன்றயல் நாட்டினிற் பெற்ற பொன்
நாடிவந்தார் புகழ்ந்தார்
கண்கவர் ஆடைபொன் கழுத்தணி யோடுயர்
காட்சி கண்டார் களித்தார் - இன்றோ
புண்படு நெஞ்சினன் பொன்பொருள் தீய்ந்தது
போயகன்றார் நகைத்தார்
எண்ணெழுத் தென் செய்யும் இல்லைத் தொழில்தெரு
ஏழையாய் நான் தனித்தேன்.

முற்றம் சிறக்கப்பல் மாந்தரென் வார்த்தைக்கு
முடியசைத்தார் பணிந்தார்
சுற்றம் உறவுகள் சொந்தங்கள் சொல்லியே
சூழ்ந்திருந்தார் இனித்தார் - இன்றோ
அற்றதவ வாழ்க்கை அனாதையென் வார்த்தைகள்
ஆதரிப்பார் இலர் பார்.
வற்றிய நற் குளக் கொக்கெனப் போயினர்
வாட விட்டார் தனித்தேன்.

# வாடகை வீடு வேண்டும்

வாடகை வீடு வேண்டும் எனக்கொரு
வாடகை வீடு வேண்டும் - அந்த
வாடகை வீட்டினிலே நலம்பல
வாழக் கிடைக்க வேண்டும்

ஓரறை மூலையிலே ஒரு கட்டில்
ஓரத்தில் என்னிருக்கை - இந்தச்
சீரற்ற சீவியத்தைச் சிறப்புறச்
செய்ய நல் வீடு வேண்டும்.

ஓட்டை ஒழுக்கிடையே எலிபாய்ந்து
ஓடும் அறை நடுவே - கொல்லும்
மூட்டை நிறை படுக்கை இருக்கை
முற்றும் கலைய வேண்டும்

சோற்றுக் கடையுணவும் தேநீருக்கு
சோம்பி அலைநிலையும் - தீர்ந்து
தேற்றும் மனையருகே அன்புணவிற்
தித்திக்க வீடு வேண்டும்.

கூடிக் குலவி யன்பு மனைமக்கள்
கொஞ்சிக் களித்திருக்க - ஒன்றி
நாடி உறவுவர வாடகைக்கு
நல்ல மனை வேண்டும்.

முற்றத்தில் நாமிருந்து நிலாச்சுடர்
மோதும் அழகொளியில் -பேறு
பெற்ற நற் செல்வங்களின் இன்பப்
பேச்சில் மகிழ வேண்டும்.

குளியலறை குசினி எமதைந்து
குழந்தைகள் கல்விகற்க - மின்
ஒளியுடன் நல்லதண்ணீர் வசதிகள்
உள்ளநல் வீடு வேண்டும்.

வாடகை வீடு வேண்டும் சிறியதோர்
வாடகை வீடு வேண்டும் - அந்த
வாடகை வீட்டினிலே குடும்பமாய்
வசதியாய் வாழ வேண்டும்.

- **சிந்தாமணி**

# வாழும் துணிவு கற்றேன்

சித்தம் கலங்கும் சில நொடிப் போதினில்
சிந்தனை நீக்கிவிடின் - வாழ்வைச்
சிக்கலாய் நோக்கிவிடின் - நான்
எத்தனையோ முறை செத்திருப்பேனெழில்
எண்ணங்கள் மாய்ந்திருக்கும் - என்றோ
என்நினை வோய்ந்திருக்கும்.

கற்றுயர்ந் தோங்கிடக் கல்விக் கலைந்தநாள்
கஸ்டங்கள் சூழ்ந்ததுண்டு - தோல்வி
கண்டுளம் சோர்ந்ததுண்டு - உடன்
அற்றது வாழ்வென ஓர் துளி நஞ்சிடம்
அடைக்கலம் போனதில்லை - வாழ
அஞ்சித் தயங்கவில்லை

கண்ணிற் கானாவினிற் காதற்கலா ஒயில்
காட்டிய நாள்களற - போற்றும்
காதலிற் தோல்வியுற - பெரும்
விண்ணும் இருள விடிவில்லை என்றுயிர்
விட்டிட எண்ணவில்லை - மன
விரக்தியில் மாழவில்லை.

செய்பயிர் சாயக் கடன்துயர் மேவிட
சிந்தை மிகவருந்தி - அன்றே
செத்திட நஞ்சருந்தி - பூவில்
உய்வழி இல்லையென் றோலமிட்டே தூய
உயிரினைப் போக்கவில்லை - வாழும்
உறுதியைப் நீக்கவில்லை.

இனிய உறவோ டிணைந்த பலரெனை
இகழப் பயந்தொதுங்கி - கோழை
இதயம் அழ மயங்கி - இங்கே
தனியன் எனக்குயி ரேனெனச் செந்தீத்
தணலில் குதிக்கவில்லை - நானோ
தற்கொலை செய்யவில்லை.

வாழ்க்கைப் பெருங்கடல் நீச்சலடித் துயிர்
வாழும் துணிவு கற்றேன் - மன
வைரம் மிகவும் பெற்றேன் - நிதம்
நீள்கை விரிக்குமெச் சோதனைக்கும் எதிர்
நிற்கும் பயிற்சிபெற்றேன் - வெற்றி
நிச்சயம் நான் பெறுவேன்.

-சிந்தாமணி-

# எத்தனை பெயரெனக்கு

எப்போதென் நற்பிறப் பெந்நேரம் சுபநேரம்
எனமுதல் ஆய்ந்தெழுத்து - குறை
செப்பாத பஞ்சாங்கம் சீரான எண்சாத்திரம்
சேர்த்தறிந் தினிமையாக - எந்தன்
அப்புவும் ஆச்சியும் அன்றெனக் கிட்டபெயர்
அனாதையாய்த் தடுமாறிட - இன்றோ
சுப்பையர் சோமண்ணர் சொல்லுபெய ரத்தனையும்
சொந்தமாய் எனக்கானதே.

ஆறிடா மனந்தினம் அலைந்திடும் பலதிசை
அன்றைய பள்ளி வாழ்வில் - அன்பு
மாறிடா நண்பர்கள் மயக்கெழிற் தோழியர்
மத்தியிற் கற்றகாலம் - "நீதான்
கூறடா தூங்கிடும் கும்பகர்ணா" எனக்
கூவியென் உபாத்தியாயர் - மூடா"
ஏறடா மேசைமேல் எருமையா" என்றவர்
ஏசிடப் பெயரெத்தனை?

காசிக்குப் போய்வந்த காலத்தே மொட்டையன்
கால்முடம் ஆனபோதோ - மனம்
கூசிடார் "நொண்டியன் சொத்தியன்" மதுவினைக்
கூடியே குடித்த போதோ - எங்கும்
பேசுவார் "குடிகாரன் வெறிகாரன்" எவரோடும்
பேசாதிருந்து விட்டால் - ஊமை
நேசமாய் அப்பெனக் கிட்டநீள் பெயரோட
நிலைத்திடும் பெயரெத்தனை.

மோசமே "வஞ்சகன் முறைகேடன் எரிநாக்கன்"
"மூர்க்கனீர் முழியன் வேடன்" - "பேயன்
நாசமே" பொய்யனின் நன்றியும் கெட்டவன்"
நரியனிங் கறிவற்றவன் - அன்று
ஆசையாய் அழகதாய் அப்புதான் வைத்தபெயர்
அடியுடன் அழிந்து போக - சூழ்ந்து
ஏசுவோர் பேசுமிப் பெயரெலாம் எனக்கெனில்
எத்தனை பெயரெத்தனை.

நாட்டுக்குச் சேவைநான் செய்தநாள் "நல்லவன்
நாயகன் பெருந்தலைவன் - அன்பு
காட்டியென் அயலவர் கஸ்ரமே போக்குநாள்
காவலன் கருணைநாதன் - போற்றி
நாட்டினர் வள்ளலே தியாகியே என்றிட
நற்பெயர் அவையானது - அப்பு
ஏட்டிலே பார்த்தெனக் கிட்டதோர் பெயரோட
எனக்கின்று பெயரெத்தனை.

நித்தமும் நான்செயும் செயலெனக் கிடும்பெயர்
நிலைத்ததோ ! பதிவிலுள்ள - அழகு
முத்தான நற்பெயர் மறைந்திட என்வாழ்வு
முனைப்பிலே பெயர்கள் பூக்கும் - அப்பு
வைத்ததோ இறைநாமம் வளமான தமிழ்தன்னை
வையகம் மறைந்துபோக - இன்று
எத்தனை எத்தனை பெயரெனக் கெத்தனை
என்பெயர் நான் மறந்தேன்.

**-சிந்தாமணி-**

# மனமது மாளிகை

காணி பெரும்பொருள் கார்லொறி பெற்றுயர்
கனதன வானெனநான் - மகிழ்
இனசனத் தாரொடுதான் - பகை
நாணி மயங்கநல் மாளிகை வேண்டிடேன்
நன்றிருந் தோய்ந்திட நான் - குடில்
ஒன்றெனக் கீய்ந்திடிற் பொன்.

நெல்லுண வின்சுவை நெய்தயிர் மோர்வடை
நேரமோர் வாய்க்குருசி - மனம்
பூரித்து நன்றுபுசி - எனச்
சொல்லப் பலவகை ஊண்சுவை வேண்டிடேன்
சொந்தமாய் வாட்டும் பசி - தீரத்
தந்திடிற் கஞ்சிருசி

பட்டுப் பீதாம்பரம் பஞ்சுடை கம்பளி
பார்வைக் கெழில் மிளிரும் - குளிர்
போர்வைக் கிதம் வளரும் - அவை
பெட்டி நிறைக்கப் பலரகம் வேண்டிடேன்
பிச்சை உடல்மறைக்க - சிறு
கச்சை மனம் நிறைக்கும்.

வானுயர் மாளிகை வாய்க்கு அறுசுவை
வண்ணப்பட் டாடைவேண்டேன் - புகழ்
எண்ணப்பொன் பூமிவேண்டேன் - மனம்
தானுயர் மாளிகை தந்திடும் இன்சுவை
தாரணி எந்தன் என்பேன் - வளர்
பாரிது சொந்தமென்பேன்.

# ஞாலத்தினை அளப்போம்

அந்தர வானத்தில் ஆடித் திரிந்திடும்
சந்திரன் போய் அடைந்தோம் - பெரும்
விந்தை இதுவென் றிவர்விரல் மூக்கினிற்
குந்தும் நிலை கடந்தோம் - புகழ்
சிந்தத் துயில் மறந்தோம்

நீளப் பெருஞ்சுவர் வானப் பரப்புடைத்(து)
ஆழம் அறிந்திடுவோம் - அவை
வீழ எடுத்துச் சுவரமைத் தெங்கணும்
வாழக் குடில் அமைப்போம் - புவி
ஆளத் துணிந்துழைப் போம்.

விண்ணிற் பரந்து விளங்கிடு தாரகை
எண்ணுக் கணக்கறியோம் - அவை
வண்ண ஒளிதர வாரியெம் வீட்டினில்
எண்ணி அடுக்கிடுவோம் - இது
திண்ணம் முயன்றிடுவோம்.

துள்ளிப் பரந்து சிறந்திடு வெண்முகில்
கொள்ளை அழகறிவோம் - அவை
அள்ளி எடுத்து அடுக்கித் துகிலென
உள்ளம் மகிழ்ந்தணிவோம் - புகழ்
வெள்ளம் மிதந்துயர்வோம்.

சிந்தை களிக்கச் சிரிக்கும் இளங்கதிர்
விந்தை உருத்தகர்ப்போம் - அதை
இந்த உலகிற் கெடுத்ததிற் பொங்கு தீ
தந்து கறிசமைப்போம் - ஒளி
சிந்தத் துயர்மறப்போம்.

காலப் பெருங்கடல் நீந்திப் புதியதோர்
கோலப் புவி சமைப்போம் - கொடும்
ஆலம் பிழிந்து அமுதம் எடுத்தமும்
ஏழை பசிகலைப்போம் - இந்த
ஞாலத்தினை அளப்போம்.

-சிந்தாமணி-

# நடு நின்று தீர்ப்பிடுவோம்.

ஓடிப் பிடித்தனர் கள்வன் அவனெங்கள்
உறவினன் என்றதும் போகவிட்டோம்
தேடித் திரிந்தனர் குடிசை எரித்தவன்
தெரிந்தவன் என்றவன் தப்பவிட்டோம்
கூடியிருந் தயற் குடியைக் கெடுத்தவன்
கொஞ்சம் அறிந்தவன் ஓடவிட்டோம்
வாடிடு மேழையை வம்புக் கடித்தவன்
வசதி படைத்தவன் என்று விட்டோம்.

பொய்யன் அவனெங்கள் புத்திரன் என்றதும்
போர்த்திக் கதையளந் தாறவிட்டோம்
செய்யும் கொடுமைகள் செய்தவன் எம்மவன்
செய்கை மறைத்தவை மூடிவிட்டோம்
வெய்ய மனத்தவர் வேதனை செய்பவர்
வேண்டியவர் எனத் தப்பவிட்டோம்
வையகம் துன்பத்தில் வாழ்ந்திட நீதியின்
வாயை அடைத்திருள் வாழவிட்டோம்.

நீதிகள் மாய்ந்தன நேர்மைகள் செத்தன
நெருக்கிய பாவிகள் வாழவைத்தோம்
பாதகம் செய்பவர் ஆறவில்லைக் கொடும்
பாதையை விட்டோ விலகவில்லை
ஆதிமுதல் இற்றை நாள்வரை குற்றங்கள்
அருகவில்லை அவை ஆளவிட்டோம்
நீதிகள் இப்புவி வாழ்ந்திட நாமெங்கள்
நெஞ்சம் நடுநின்று தீர்ப்பிடுவோம்

- முரசொலி-

# நற்செயல் நிலைக்கும்

மண்ணிற் பிறந்துயர் மனிதனெனச் சில
        மயக்குறு நாட் கழித்தாய் - இன்று
கண்ணிற் தெரியா துருவழிந்து பொய்க்
        காட்சியே வாழ்வு என்றாய் - தீ
தண்ணீர் வளிநிலம் தாரணி எங்கணும்
        தனிப்பொருள் உன்னதென்றாய் - சிறு
மண்ணாய் மறைந்துயிர் மாயமாய்ப் போயினை
        மாநிலம் நீ பிரிந்தாய்.

காதலுக்காய் உளம் கலங்கிச் சிலதினம்
கடுந்தவம் ஏன் புரிந்தாய் - வீண்
மோதலினால் வயல் வீடு பொருள் என
மோக நிலை வளர்த்தாய் - சாதிச்
சோதனையும் மன வேதனையும் எழச்
சுகமிழந்தேன் உழன்றாய் - நீ
சாதலின் பின் மனம் மெய்யுணர் வற்றிடச்
சஞ்சலம் ஏது மற்றாய்.

காசினி மீதொளிர் காட்சிகள் யாவையும்
கண்ணுக்கினிமை கண்டாய் - சிறு
தூசது ஆயினை தொடர்ந்தது ஏதுமில்
துயில் நிலை நீ தொடர்ந்தாய் - மன
ஆசைகள் அல்லல்கள் அத்தனையும் நீங்க
அமைதி உலகடைந்தாய் - உயிர்
பாசம் பரிவு பறந்தது நீலவான்
பரப்பிடை நீ புகுந்தாய்.

எண்ணங் களும்புவி வண்ணங் களும்மோதி
எழும்செயல் நூறுகண்டாய் - உடல்
உண்ண உழைத்து உயிர்நிலைக்கப் பயன்
உண்மையில் ஏது கண்டாய்? - இன்று
மண்ணது உன்னுடல் மடிந்தது வாழ்விது
மாயம் நீயே உணர்ந்தாய் - என்றும்
திண்ணமுன் நற்செயல் திகழ்ந்தொளி வீசிடும்
திருப்தி ஒன்றே நிலைக்கும்.

-சிந்தாமணி -

# அந்த நாளுஞ் சீருணவு எங்கே?

பொன்னாச்சி பேரனல்லோ வாடா தம்பி
புன்னகையோ மாறவில்லை வளர்ந்து விட்டாய்
என்னாச்சு உடம்புக்கு இளைத்துப் போனாய்
ஏது புது நாகரிகம் வளர்ந்த தல்லால்
மண்ணாச்சு எங்களுயர் உணவும் போச்சு
மணிதவறா துண்டென்ன? சத்தில்லைக்காண்
புண்ணாச்சு மனமிந்தப் புதுயுகத்தின்
போக்கெண்ணிக் கலங்குகிறேன் இரடா தம்பி.

ஆறுபணம் கொண்டந்தப் பட்டணம் போய்
அரிசிபுளி காய்கறிகள் உப்பும் வாங்கி
கூறுபட முடிச்சிரண்டில் கட்டி ஏற்றக்
கூலிக்கும் ஆள்பிடித்த செலவு போக
வாறபொழு திரண்டுபணம் மீதி கொண்டென்
வாசலிலே வந்திறங்கி மகிழ்ந்தகாலம்
போறதிசை தெரியாமற் போச்சுச் சின்னப்
பொலித்தீன்பை நிரப்பவின்று நூறு வேணும்.

தகரத்தில் போத்தல்களில் பொலித்தீன் பைக்குள்
தாள்வண்ணம் காட்டியெதோ அடைத்து விற்பார்
நகரத்துச் சாப்பாடு நரகம் தின்றென்
நாக்குக்குச் சுவையில்லை எங்கள் காலம்
பரகத்தான் மொழியுண்டோ பனம் பண்டங்கள்
பனாட்டொடியல் கூழ் எண்ணில் வாயேயூறும்
நிகருண்டோ வரகரிசிச் சோறு மொண்டி
நெல்லுழுந்து சாமைகம்பு தின்றலுத்தோம்.

தூதுவளை முசிட்டையிலை முருங்கைக்கீரை
தும்பைக்காய் என்னருசி குறிஞ்சாச் சுண்டல்
ஏது இணை இவைக்கின்று என்ன ஆச்சு
ஏதேதோ மேல்நாட்டு மோகம் தாகம்
போதுமடா தம்பியிந்தப் புடிங்கும் கேக்கும்
பூச்சடித்த சுவருள்ளே குப்பை கூழம்
தாது நிறை எம்முணவை நீக்கி விட்டுத்
தரித்திரத்தைக் காதலித்தோம் எங்கள் பாவம்!

நடமாட வலுவில்லை நாங்கள் வாழ்ந்த
நாட்களைப்போல் இன்றில்லை அணுவின் வேகம்
விடமிட்டோ புதிதாக விளைந்த நோய்கள்
விசித்திரங்கள் உணவின்று குளிகையாச்சு
முடமாடாய் வீழ்ந்திந்தப் புவியில் வாழ்ந்து
முன்னைய நம் பெருமைகளை மறந்து போனோம்
அடடா ஏன் நிற்கின்றாய் இரடா தம்பி
அந்த நறுஞ் சீருணவு எங்கே போச்சோ!

-ஈழநாடு-

# சீதைவரை வருவது பொய்மை

அருந்ததி கால மாகினாள் நாளை
அவளது தகனமோ நடக்கும்
பெருந்தனர் முன்னாட் சபையுறுப் பினர்தம்
பேரன்புக் குரித்துடை மனைவி
வருந்திடும் மக்கள் லண்டன் வாழ் தீபன்
வசந்தன் ஜேர்மனியுறை காந்தன்
பொருந்திடு சவூதிப் பொறியிய லாளர்
பூரணன் பிரான்சிலே ரமணன்.

மருமக்கள் பேரர் மட்டிலா உறவு
மாண்புற நீண்டது. முடிவில்,
உற்றார் உறவினர் இவ்வறி வித்தல்
உரிமையோ டேற்றிடும் என்ற
இருமுறை மரணச் செய்தியென் இதயம்
ஈர்த்திட ஒருபொழு தமைதி
பெருமையோ டன்னை பிணமது நாளை
பேழையுள் எழிலுற நகரும்.

உறவுகள் எங்கோ நாட்பட வந்து
உரிமைகள் பேசுது மரபு
துறவுதான் ஆச்சி அருந்ததி இறுதி
துன்பமும் தனிமையும் தவிப்பும்
உறவெனக் காலம் ஓட்டினாள் பாச
உளமதைத் தேற்றிடத் தினமும்
பெருமையாய் மைந்தர் பிரான்சிலே எந்தன்
பெரியவன் சவுதியில் என்பாள்.

பலகிளை பரப்பிப் படர்ந்த நற் கொடியாய்
பாரினை நிரப்பிய உறவு
உலகிடை அன்னை உறவிலும் உயர்ந்த
உறவெது? அவள் மனம் விந்தை.
சிலபொழுது அன்பு செய்திடா மைந்தர்
சிதைவரை வருவது பொய்மை
இலையுயிர் இன்றோ. இவர் பெரிதாக
இத்தனை புரிகிறார் ஏனோ?

- வீரகேசரி-

# அந்த வீடு

தவழ்ந்து தவழ்ந்து தத்தி நடந்து,
அவிழ்ந்த ஆடையை அலட்சியம் செய்த,
அந்த நாட்கள், அந்த வீடு
இந்த நாட்களில் என்மனத்தோடு.

எந்தன் கிறுக்கற் சித்திரம் என்றும்
அந்தச் சுவரில் அழிந்திடா தின்றும்
வண்ணக் கலைமிளிர் வடிவிற் தோன்றும்
எண்ணம் அதனை இன்றும் எழுதும்.

பாடியென் அண்ணன் பக்கலிற் கூடி
ஓடித் திரிந்து ஒளித்து விளையாடி
இருந்த அறையென் எதிரில் இன்றும்
விரிந்து அழியாச சுவடாய்த் தோன்றும்.

அந்த வீடு அம்மா பெற்ற,
சொந்தச் சீதனச் சொத்தாம் ஆமாம்.
வந்தது வீடென் தங்கைகள் உரித்தாய்
நொந்தனர் பிரித்துப் பங்குகள் பலவாய்

சீதனம் சீதனம் சீதனம் என்றே.
ஆதனம் வீடு அனைத்தும் பிரித்தார்.
என்போல் இன்றங் கிருப்போர் எந்தன்
அன்புத் தங்கைகள் அவர்தம் மக்கள்

எனக்கிவ் வுலகில் வீடெதும் வேண்டாம்,
எனக்கென வீடங்கே உண்டாம்.
தமக்கென வீட்டைத் தங்கைகள் மக்கள்
சுமக்கிறார் இன்னும் சொற்பநாள் ஓட,

பங்குகள் பங்குகள் பல சீதனங்கள்
அங்கிருப் போருக்கு அதிற்சிறு பங்கு
சீதனம் சீதனம் சீதனம் என்றே
ஆதனம் வீடு அறுந்து சிதைந்து

மறைந்திடும் இந்தச் சீதனம் மறையா(தா?)
நிறைந்ததென் நினைவில் நிலையா வீடு.
அந்த வீடு அம்மா பெற்ற
சொந்தச் சீதனச் சொத்தாம் ஆமாம்.

**- வீரகேசரி-**

# இரவல் வேணும்

கந்தப்பர் மகளெழிலி சரசுவுக்குக்
கலியாணம் முத்தம்மா மூன்று நாளாய்
எந்தப்பூச் சேலையதைக் கட்டவென்றே
ஏங்குகிறாள். எதிர்வீட்டு ராசாத்திப்பெண்
சொந்தப்பொன் சரிகைப்பூச் சேலைகட்டி
சொகுசாக வந்திடுவாள் அதனாலன்றோ
அந்தப்பூச் சேலைக்குப் போட்டியாக ,
அழகான காஞ்சிபுரம் இரவல் வேணும்.

முத்தம்மா கழுத்தினிலே தாலியுண்டு.
முன்வீட்டில் நாலாறு பவுணிற் தாலி
பத்தினியென் றூர்புகழ ராசாத்திப்பெண்
பகட்டாகக் கட்டிடுவா ளென்றோநல்ல
பத்துநிறை பவுண்தாலி வைரம் சேர்த்த
பாற்சங்கு அட்டியலோ டிரண்டு பட்டில்
முத்திணைத்த சங்கிலியும் கல்லுத்தோடும்
மூக்குத்திப் பூவுமது இரவல் வேணும்.

கொண்டைப்பூ லிப்ஸ்ரிக்கு ஐபுறோவும்
கொலுவான காற்செருப்பும் வாசம்மிக்க
சென்டோடு கைப்பையும் இரவல் வேணும்
செருக்கோடு முத்தம்மா சிரிக்கும் காட்சி
கண்டந்தக் கலியாண வீடே சொக்கி
கடைக் கண்ணாற் பார்த்தயர்ந்து போக
வேணும்
வண்டாக அலைகின்றாள் மூன்றுநாளாய்
வடிவழகிக் கெழில்கூட்ட இரவல் வேணும்.

- சிந்தாமணி-

# இன்னுணவாய்
# மாற்றிடுவீர்

விலகும் துயரொரு நாள்
விடிவு வரும் என்றிருந்து,
உலகம் அழுகிறதே
உண்பதற்கோ கஞ்சியில்லை
கலகம் நிறைகிறது
கைகலக்கும் ஆயுதங்கள்
புலராச் சமாதானப்
புரட்டோலம் போர்முழக்கம்.

கஞ்சிக்கழும் குழந்தை
காணும் பயங்கரங்கள்
நெஞ்சை உருக்குமவை
நீறாக்கி நீரெழுவீர்
அஞ்சாதே அன்புலகை
அழிக்கவரும் குண்டொழித்து
பஞ்சத்தைப் போக்குநறும்
பாகாக்கி நீர் பெறுவீர்

நாளையிந்த நானிலத்தை
நடத்துமுயிர்க் கூடுகளே
வேளையிதோ எம்முலகம்
வேண்டுவதோ மூச்சுவிட
ஆளைஆள் தின்னுமொரு
அவலநிலை ஆகுமுன்னர்
ஏ:ழைகளுக் இன் உணவாய்
ஏறிகுண்டை மாற்றிடுவீர்

- சிரித்திரன் -

## அவன் காட்டிய ஊர்.

பூப்படைந்த மகள்போலப் பொலிந்து தோன்றும்
பொங்கியெழும் கடலலைமேற் கலங்கள் ஆடும்
பாப்புனைந்து பரவசிக்கும் இதயம் ஆர்க்கப்
படுத்திருந்தேன் வெண்மணல்நீள் பரப்பின்மீது
காப்பணிந்த கரத்தாள் என்கவிதை போல்வாள்
கன்னிதமிழ் வேதத்தின் நாயகியாள் வந்தே
மூப்பறியா துழைத்துமகிழ் மக்கள் சூழ்ந்த
முதுதமிழ்த் தாய்நிலம் காண எழுக என்றாள்.

நீள்பன்னபூ வரசுபுளி வேம்பு தென்னை
நிறைந்தாடும் நெடுந்தீவு மண்ணில் இன்பம்
வாழ்கிறது வாநடநீ முன்னே தீவு
வனப்பழியா துழைப்பாலே உயர்ந்து தோன்ற
ஏழ்மையற எள்வரகு சாமை மொண்டி
ஏர்நடத்திக் காண்பவர்கள் சுவையில் மிக்க
கூழ்ஒடியல் பனாட்டு நறும் பிட்டு ஒன்று
கூடியுண்ணும் நிலைகாண வாவா என்றாள்.

ஆவோடும் வெளிகளிலே கன்றும் பொங்கும்
அரியசுவைப் பால்மனையில் மோரும் நெய்யும்
மாவோடும் வெல்லையிலே மகிழ்வும் தீவின்
மதிமன்னர் வாழ்க்கையிலே நிறைவும் வீட்டில்
பூவோடும் பொட்டோடும் பொலிவும் சேரப்
புன்னகைத்தே இணைந்துழைக்கும் மக்கள் கண்டே
சாவோடும் பனையோலை பதமாய் வார்ந்து
சமைப்பார்கள் பாய்பெட்டி பார்பார் என்றாள்.

எண்ணரிய பொருளாக்கும் திறன்கள் மிக்கோர்
எழுத்தாளர் நல்லறிஞர் நிறைந்து நிற்பார்
பண்ணரிய கல்வேலி பார் பார் என்றென்
பக்கத்தே கரம்பற்றி இழுத்தாள் நானோ
கண்ணசைத்தேன் காரிகையைக் காணேன் முன்னாள்
காட்சியிவை நினைவாக எழில்சேர் அந்தப்
புண்ணிய நற் தீவு நிதம் உயர மக்கள்
பொருள் வளத்தாற் சிறக்கவொரு புதுமை செய்வோம்.

- ஈழநாடு -

# வாழ்க்கையில் வாழ்த்து அருள்

இத்தனை நாளவன் சத்திர வாசலில்
கத்திப் பசித் தழுதான் - சுகம்
காணத் திசை தொழுதான்
செத்துத் தொலைந்தபின் எத்தனை பேரிங்கு
மெத்தப் புகழ்ந் துரைப்போம் - அவன்
மேன்மைக் குவமை சொல்வோம்.

வாழும் வரையொரு நாளும் அவன்திறன்
ஆளும் பெருமை சொல்லோம் - வளர்
ஆற்றல் வளம் சிதைப்போம்
மாழும் வழிசெய்து சூழும் பிணிகண்டு
மூழும் பகை ரசிப்போம் - துயர்
மூழ்கும் வகை முடிப்போம்.

என்றும் உயிர்நிலைத் திருக்கும் வகைசெயல்
நன்றெனப் போற்ற எண்ணோம் - அவன்
நாமத்தைத் தூற்றி வைப்போம்
சென்று மறைந்தபின் மன்றங்கள் கூட்டியே
நன்றவன் வாழ்வு என்போம் - சிலை
நாட்டிப் பெருமை செய்வோம்

வாழ்விதில் நாளும் வருத்தும் சுமையற
தோள்கொடு தொல்லை இல்லை - வாழும்
நாள்சுகம் அன்பு எல்லை
சூழ்கல்வி செல்வம் சுதந்திரம் பெற்றிட
வாழ்கையில் வாழ்த்து அருள் - செத்தபின்
வாழ்த்துக்கு ஏது பொருள்?

# மண் சிறக்க
# ஒரு கவிதை

வண்ணமுகில் வடிவழகை
    வசந்தத்தின் தூறல்களை
வெண்ணிலவின் தண்ணொளியை
    வேய்ங்குழலின் நாதத்தை
விண்மீனைப் பொன்னந்தி
    வேணியெழிற் காட்சிகளை
கண்கவர மெய்மறந்து
    கவிபுனைந்து கண்டதென்ன?

உள்ளப் பெருவெளியில்
உணர்வுகளின் மெல்லிசையில்
மெள்ளத் தலை நீட்டும்
மெய்யன்பின் உயிர்ப்புகளை
அள்ளிக் குவிக்குமிளம்
ஆசைவளர் காதலரின்
பள்ளியறை ஊடல்களைப்
பாப்புனைந்து பார்த்துமென்ன.

வீரத்தை விவேகத்தை
விடுதலைநா டுள்ளத்தை
சீரோங்கத் தம்முழைப்பாற்
செகம் புதுக்கும் தீரர்களை
கூரம்பாய் மனம்பதியும்
கொஞ்சுதமிழ் வார்த்தைகளால்
பூரிக்கச் சேர்த்துயிராம்
புதுக்கவிதை யாத்துமென்ன?

புரிந்துணர்வு பெற்றுண்மை
போற்றாத பாமரரும்
கரந்துறையும் கள்வர்களும்
கருணையிலா மாந்தர்களும்
வருந்திமனம் திருந்திட நீ
வாழ்வோங்கச் சஞ்சீவி
மருந்தாக ஒரு கவிதை
மண்சிறக்கச் செய்துவிடு.

-சஞ்சீவி-

# நிமிர்

காலப் பேரேடுதனை விரி
நிலைகுலைந்த
கதையின் துயர்வரியை அழி

நீலப் பெருவெளியை உடை
எழில் விளங்கும்
நிலவோ டொளிர் உடுக்கள் தொடு

ஞாலத் துறுமகிமை வளர்
கற்றுயர்ந்து
ஞானப்பன் பாடியிறை தொழு

ஓலப் புயல் கடக்க நிமிர்
வாழ்வுறுதி
உழைப்புக் கரமிணைப்பு உணர்.

- கவின்தமிழ் -

# தேவமைந்தன்
# பிறந்தார்.

விண்ணில் ஒளிருமொளி - மனு
வேந்தன் சிறு குடில் தன்னில் ஒளிர்ந்திட்ட
மண்ணில் உயர்ந்த தினம் - மாமரி
மைந்தன் உதித்த தினம்.

பூவிற் பிறந்த இறை - சுற்றிப்
போர்த்திய துன்ப இருட்கறை போக்கிடும்
பாவிகள் நேச மீட்பர் - சிறு
பாலகன் யேசு மேய்ப்பர்

தட்டுங்கள் தாள் திறக்கும் - நாம்
தாங்கிச் சுமந்திடும் பாவச் சிலுவையை
தொட்டவர் தோள் சுமக்கும் - வாழ்விற்
தூய வழி பிறக்கும்.

கேளுங்கள் பெற் றுயர்வீர் - வெற்றிக்
கேடகம் நல்லிறை மைந்தனின் வார்த்தைகள்
சூழுங்கொல் அச்சம் வெல்வீர் - பாவச்
சுமையை இறக்கிச் செல்வீர்

சத்தியம் ஜீவன் வழி - பாவச்
சாவினை வென்றிடும் தேவ குமாரனெம்
நித்திய ஜீவ தண்ணீர் - இருள்
நீக்கிடும் ஞான ஒளி

வாழ்த்தி வணங்கி நிற்போம் - தேவ
வார்த்தைகள் மாமிசம் ஆகியே வந்தநாள்
ஆழ்த்தும் மகிழ்வில் அன்பில் - வழி
ஆக்கும் உயர்வில் என்போம்

அர்ச்சுனா.

# பொங்கல் திருநாள்

பொழுது சிரிக்கட்டும் கீழ்வானில் - எழில்
பூத்துச் சிரிக்கட்டும் நம்மனையில்
தொழுது சிரிக்கட்டும் பக்தருளம் - வாழும்
தூய்மை சிரிக்கட்டும் வெண்ணுடையில்
அழுதவர் பெற்றிட்ட நல்வெடிகள் - அவை
அழித்துச் சிரிக்கட்டும் நம் சிறுவர்
உழுதவர் பெற்றிட நெல்மணிகள் - மகிழ்(வு)
ஊறச் சிரிக்கட்டும் பொங்கலிட

கோலம் சிரிக்கட்டும் முன்தரையில் - ஒன்று
கூடிச் சிரிக்கட்டும் நல்லுறவு
காலம் சிரிக்கடடும் நல்வரவில் - வளர்
கனகம் சிரிக்கட்டும் பெட்டகத்துள்
சீலம் சிரிக்கட்டும் செந்தமிழர் - அறம்
சேர்ந்து சிரிக்கட்டும் பொன்னொளிர
நாலும் சிரிக்கட்டும் நம்மருகில் - திரு
நாளே சிரிக்கட்டும் பொங்கலிட.

மங்கை சிரிக்கட்டும் நல்லறத்தில் - அன்பு
மக்கள் சிரிக்கட்டும் ஒற்றுமையில்
செங்கை சிரிக்கட்டும் சேவையினில் - வளர்
சிந்தை சிரிக்கட்டும் சத்தியத்தில்
எங்கணும் பொங்கிடப் பாற்குடங்கள் - நலம்
இணையச் சிரிக்கட்டும் பாலமுதம்
மங்கலம் பொங்கிட நாற்திசையும் - நன்றி
மனங்கள் சிரிக்கட்டும் பொங்கலிட

-சிந்தாமணி-

# சித்திரைப் புது நாள்

சித்திரைப் பொன்மகள் செம்பவளப் பரல்
சிந்தச் சிரித்தனளோ - நலம்
இத்தரை சூழ்ந்துமெய் இன்பம் தரும்பயன்
ஈயப் பிறந்தனளோ - எமை
நித்தம் வருத்துபொய் நீசரை நீக்கிமெய்
நிலைக்கப் பணிதொடர்வோம் - எங்கும்
புத்தொளி தேக்கும் புதுக்கலை பூத்திடப்
புரட்சி விதி சமைப்போம்.

அற்புதம் சித்திரை ஆரணங்காள் வளம்
ஆக்கப் பிறந்தனளோ - திரு
பொற்பதம் தாழ்ந்துகை கூப்பும் எமக்கருள்
பொழியச் சிறந்தனளோ - அன்பு
கற்பகப் பூம்பொழிற் தென்றலில் நம்மனை
களிக்க உழைத்துயர்வோம் - தூய
சொற்திறம் பாச்செயல் வீரர்கள் தோன்றமண்
சொர்க்கம் படைத்திடுவோம்.

கண்மணி சித்திரைக் கட்டழகாள் உளம்
களிக்கச் சிறந்தனளோ - வளர்
வெண்மனத் தோடிளம் வேணி இசைதர
வேண்டிச் சிரித்தனளோ - தவழ்
மண்பிறக்கும் விடிவொன்றினை நாடிநல்
மக்கள் துணை பெறுவோம் - நீதி
கண்திறக்கும் பகை வென்றினிக்கும் தினம்
கண்டுயர்ந் தாடிடுவோம்.

-சஞ்சீவி-

# புத்தாண்டு முதல் நாள்

வருவாய் வருடா வருடமே உனை நாம்
வசந்தமென் றேத்தியே தொழுவோம்.
திருவாய் உயர்வாய்த் திகழ்ந்துனைப் போற்றி
தினமிதிற் களித்தயர் கின்றோம்
உருவாய் வளர்ந்து பன்னிரு திங்கள்
உலகிதில் ஆட்சி நீ புரிவாய்
ஒருநாள் இன்றுன் ஒப்பிலாத் திருநாள்
ஒன்றி இன்புற்றிட வருவாய்.

காலமாம் கடலிற் காண்கிறோம் இளமை
காட்சிகள் கவிதரும் இனிமை
ஞாலமாம் வெளியில் நாளொரு மாற்றம்
ஞாயிறின் ஒளிபொழி புதுமை
கோலமோ விளைக்கும் குவலயம் செதுக்கும்
கோனுனக் கோய்வெதும் இல்லை
சீலமோ புதுக்கிச் சித்திகள் பெருக்க
சிறப்பொடு வருக நீ நல்லை.

சிரித்திடக் கலாநற் சிறுமகள் போல
சித்திரப் புத்துடை பூண்டாய்
தரித்திடக் கணமோ தயங்கி நீ விரைவாய்
தாரணி செழிக்குநல் ஆண்டாய்
எரித்திடு சிறுமை எதிர்த்தெழு மகிழ்வாய்
எழில்தரு புவிவளர் பெருமை
விரித்திட வேத மறைதரு ஞான
விளக்கென ஒளிருவாய் வருவாய்.

வீற்றிருந் தாண்டே சரித்திரம் படைக்க
வீண்பகை நீண்டிடா தொழிக்க
சீற்றமோ அடங்கிச் சிந்தையில் அமைதி
சீக்கிரம் நம்மிடை நிலைக்க
ஏற்றமாம் கருணை இறைபணி சிறக்க
ஏழ்மைகள் கலைக்க நீ வருவாய்
மாற்றுக புவி ஆள் மடமைகள் அன்பால்
மாறிடா மகிழ்வுநீ தருவாய்

# ஏர் சிறக்கும் பொங்கல்

காலந்தான் மாறக் கருத்தற்ற பொய்மைக்
கயமை மறையவுயர் புதிய
ஞாலந்தான் உதயம் ஆகுமெனக் காத்து
ஞாயிறெழு முன்னெழுந்து ஏர்தன்
வேலொடிக்கும் தோளில் வீற்றிருக்கப் பொங்கும்
விளைச்சலினை நோக்கி உழைக்கின்ற
சீலநிறை உழவன் ஏர்சிறக்கப் பாடும்
சிந்தையுளேன் ஐயையோ எதிரே!

உதிரமிக ஈந்து உழைப்பதனைச் சோம்பி
உறுஞ்சுமொரு அதிகாரக் கும்பல்
கதிரையில் உட்கார்ந்து களித்தெங்கள் ஏழைக்
கமக்காரன் அடிமையெனத் தாழ்த்தி
சதிராடி, உயிரே தருமேரின் பெருமை
சரித்துரிமை தமதாக்கி என்றும்
விதியென்ற சொல்லால் விலங்கிட்டுத் தூய
விவசாயி வாழ்வு கெடுக்கின்றார்.

பார்முழுதும் பஞ்சம் பசியகற்றும் நெஞ்சம்
படைத்த உழவன் விழிகள் நாளும்
நீர்பெருக்கி நிற்கும் நிலையெதற்குச் சொந்த
நிலமவனுக் கில்லையுடல் குன்றி
நார்போலத் தொய்ந்து நாதியற்று ஏனோ?
நலிந்தழியும் கோலமது கண்டும்
ஏர்சிறக்கும் வழிதான் ஏதென்றே எண்ணா(து)
இருப்பதுவும் நம்மவர்க்கு முறையோ?

நாளுக்கு நாள்நம் நாடுயரும் என்றே
நாம்நினைத்துக் காத்திருக்க இங்கே
ஆளும்பேர் உயர அவர்துணைகள் உயர
அரிசிமா பால் பருப்புச் சீனி
வேளைக்கோர் விலையாய் விறுவிறென உயர
விடிவறியா வாழ்விற்துயர் உயர
தாளிட்டு வீணர் கால்தொட்டு வேலை
தாவென்றால் வேறுயர்வு ஏது?

கூழருந்தி நாட்டைக் கொலுவேற்றி விண்ணே
கூரையெனக் குடியிருக்க நாளும்
வாழ்வதுவும் நைந்து வலிமையற முதுமை
வந்துயிரை வாட்டிடவும் நெஞ்சம்
பாழடைய நிற்கும் பாட்டாளி பாரின்
படைப்பாளி இவ்வலகித் திறைவன்
ஆளப்படுவது மேன் அவன்வாழ்வு பொங்காது
அடங்கிக் கிடப்பதுமேன் சொல்! சொல்!

பொங்கட்டும் இளைஞர் புதுவுலகை நோக்கிப்
பொங்கட்டும் அடிமையென வாழ்ந்தோர்
பொங்கட்டும் நாடே பொதுமையது நோக்கிப்
பொங்கட்டும் ஏர்சுமந்த தோள்கள்
பொங்கட்டும் தூய உள்ளங்கள் ஒன்றிப்
பொங்கட்டும் தீயவர்நாத் தீயப்
பொங்கட்டும் ஏர்தான் புகழ்சிறக்க நாட்டில்
பொங்கட்டும் மறுமலர்ச்சி பொங்க.

- களனி -

# மே . தினமே.

உழைப்பவர் செல்வம் உறுஞ்சித்தம் தொந்தியை
ஊதிட வைத்தவர்கள்
விளைக்கும் உழவரை வேதனைச் சேற்றினுள்
வீழ்த்திச் சுகித்தவர்கள்
இழைக்கும் கொடுமைகள் ஆயிரம் தம்வினை
இத்தனையும் மறைத்தோர்
உழைக்கும் செகந்தனைக் கூவியோ மேதினம்
ஊர்வலம் மேடையிட்டார்.

மேட்டுக்குடி முதலாளிசெய் தீமைகள்
மெச்சியோ நின்ற ஆட்சி
பாட்டாளி நெஞ்சம் படுந்துயர் போக்கிடப்
பாதை இடாத கட்சி
கூட்டாக மேதினம் கூச்சமும் இன்றியே
கொண்டாட வந்த காட்சி
பாட்டாளி மக்களை ஏய்த்திடும் பாசாங்கு
பார்த்தோம் ஏமாறமாட்டோம்.

காட்டைத் திருத்திக் களனிகள் ஆக்கிக்
களித்தவர் செல்வமுற
வாட்டம தோட்ட வருந்தித் தொழில்புரி
வல்லவர் நல்லவர்கள்
நாட்டை விருத்தி செய் வீரமாள் வேங்கைகள்
நல்முழைப் பாளர்கரம்
கூட்டியவர்துயர் போக்க உழைத்திரு
குரல்கொடு மேதினமே!

**கதிரவன் 01.05.2002**

# எழுபத்தைந்தாண்டு இறைமக்கள் பணியில்

அன்போடு அணைத்துறவாய் அயலானைக் காக்கும்
இன்பாசப் பணிநோக்கும் இறைஞான இதயம்
பொன்சேர்த்து புகழ் சூழ்ந்து பொலிந்தமொழி வாழும்
என்தீவு நெடுந்தீவின் எழில்சேர்ந்த தன்மை

வரையூர்ந்து இசைவேணி வளங்காணாப் போதும்
திரையூர்ந்து தனமோங்கத் திசையாவும் மோதும்
கரைகண்டு தமிழுள்ளம் கவிதைக்குள் மூழ்கும்
விரைமாநல் விளைநிலங்கள் விளங்கு நெடுந் தீவு

கற்றொழுகும் களிப்புலவும் கலைச்செல்வம் ஆளும்
வற்றாத கருணைமன வலுமிக்கோர் பக்தி
பொற்காலம் திருச்சபையெம் பூம்பொழிலில் பூத்த
நற்கோவில் நம்மவர்க்கே நாடுமருள் தேக்கும்.

ஆண்டாண்டு நமைக்காத்த ஆண்டவர்சீர் வழியில்
பூண்டதிரு பணிமிளிரப் புறப்பட்ட புனிதர்
வேண்டுவன விளங்கிவர விசுவாசம் உறுதி
தூண்டுமிறை வழிபாடு துலங்கிடவே செய்தார்.

முழுமைக்குள் பயன்கூட்டும் முயற்சிக்கோ நூற்று
எழுபத்து ஐந்தாண்டு இறைமக்கள் பணியில்
விழாக்காணும் விழுதூன்றி நிழல்பரவ விழ்பெறநம் மக்கள்
செழுமைக்குள் தென்னிந்திய திருச்சபையின் சேவை

நீடுயர நின்றெங்கள் நிலம்காக்க நித்தம்
கூடுகநல் ஆயருடன் குன்றுயர்ந்த ஒளியாய்
பாடுகமெய்ப் பரன்நாமம் பாவமறத் தூய்மை
தேடுகசீர் தெய்வமணம் தேசமெலாம் நிறைக.

**தென் இந்திய திருச்சபை**
**நெடுந்தீவு ஆலயம்**
**175 ஆண்டு நிறைவு மலருக்காக.**

# எனக்குடையாள்

இடையோ துடி இதழோ மலர்
இவளோ ஒயிலுடையாள்
நடையோ மயில் நகையோ தமிழ்
நங்கை எனக்குடையாள்

கங்கை குழல் காந்தள் விரல்
கமலக் கரமுடையாள்
கொங்கை குடம் குமுதம் எழில்
கொண்டாள் எனக்குடையாள்

கண்டாள் இதழ் கலந்தாள் அவள்
கவிதை தரும் பொருளே
உண்டோ துயர் உயர்வே நிதம்
உரிமை சுகம் அவளே.

- பூபாளம் -

# *பார்த்துக் கண் காத்திருக்கும்*

நங்கை குடங்கரத்தே யெடுத்தால் இள
நளினம் துலங்கி நிற்கும் - குடம்
அங்கம் பொருந்த இடைநெளிய மிளிர்
அழகு விளங்கி நிற்கும் - எழில்
பொங்கும் தனங்கள் குலுங்க நடக்கவென்
புத்தி கலங்கி நிற்கும் - ஒளிர்
தங்கம் அவள் நிழல் தானணைய மனம்
தாவிக் குலுங்கி நிற்கும்.

மின்னல் ஒளிக்கீற் றசைந்து நடக்கவென்
மெய்சிலிர்த் தேங்கி நிற்கும் - சுவைக்
கன்னல் இளநகைக் காந்தம் கவரவென்
கற்பனை பொங்கி நிற்கும் - கரும்
பின்னல் அசைந்தெனைப் பின்தொடர் என்றிடப்
பேச்சு மயங்கி நிற்கும் - நிறை
பொன்னில் வடித்த செம் பூவையெதிர் மனம்
போகத் தயங்கி நிற்கும்.

காதற் கலாமகள் கையசையப் பெரும்
காவியம் தோன்றி நிற்கும் - மென்
பாதம் தரையினில் பண்ணொடு நல்லிசைப்
பாட்டு வழங்கி நிற்கும் - உயர்
வேதத் தலைவிதண் ணீர்க்குடம் ஏந்திட
வேட்கை பெருகி நிற்கும் - நீர்
மோதும் குடந்துளி முத்துக்கள் சிந்திட
மோகம் விரவி நிற்கும்.

உள்ளம் நிறைந்திடும் ஊமைக் கனவுமெய்
ஊறிப் பரவி நிற்கும் - வாழும்
கள்ளமில்லா அவள் காதலுக்காய் மனம்
காத்திருந் தேங்கி நிற்கும் - நீர்
அள்ளி நடக்கும் அவளெழில் கண்டிட
ஆர்வமிக் கோங்கி நிற்கும் - தினம்
பள்ளத்து வீதியில் பாவையின் பூநிழல்
பார்த்துக் கண் காத்திருக்கும்.

- சிந்தாமணி -

# அவளோடு

தேன்நிறைந் தாடிடும் தென்றலிற் பூவெனத்
திகழ்ந்திருப்பேன் அவளெண்ணி - எனைத்
தானணைத்தே இதழ்த் தாகநீர் தந்துடல்
தழுவி நிற்பாள் கயற்கண்ணி

மான் குதித் தாடிடும் மாமலர்க் காவென
மயங்கிடுவேன் அவள்மீது - இள
மீன்நெளிந் தாலுள மின்னலைப் போலிடை
மேனியீவாள் இளமாது.

வான்பறந் தாடிடும் வண்டினம் போலிசை
வசப்படுவேன் அவளோடு - நறுந்
தீன்குவி மென்தனம் திரண்டெழுந் தென்னுடல்
தீண்டநிற்பாள் இளம் பேடு

கான்மகிழ்ந் தாடிடும் மாமயில் போலுளம்
களித்திருப்பேன் அவள் தொட்டு - வளர்
கூன்பிறை நெற்றிநற் குங்குமம் சிந்திடக்
கொஞ்சி நிற்பாள் அந்தச் சிட்டு.

ஏன்பிறந்தேன் எனும் எண்ணம் நிறைந்தெழும்
ஏங்கிடுவேன் ஒருவேளை - இதோ
நான் பிறந்தேன் உமைத்தாங்கிட என்றுடை
நழுவநிற்பாள் இளவாலை.

நான் மறப்பேன் இப்புவி ஒருபோ தெழில்
நாயகியாள் உடல்பட்டு - உடன்
நான்மறவேன் புவி நீங்களென் றெந்தனை
நன்றணைப்பாள் மலர்மொட்டு.

- சிந்தாமணி -

# ஏன் மறந்தாள்

வண்ண நிலவொளி வண்டுறை தேன்மலர்
வடிவில் அவள் சிரித்தாள் - பசுங்
கொடியில் உடல் அசைத்தாள் - காதல்
எண்ணப் பெருவெளி ஏக்கம் நிலைத்திட
எந்தனை ஏன் மறந்தாள் - இன்பச்
சிந்தனை ஏன் துறந்தாள்.

சின்ன விழிக்கணை செங்கயல் பாய்ந்திடும்
செய்கையில் வந்தினித்தாள் - மலர்ப்
பொய்கையில் நின்றிசைத்தாள் - ஆசைக்
கன்னற் கலாமகள் கற்பனை தீயவென்
காதலை ஏன் மறந்தாள் - மன
வேதனை ஏன் விதைத்தாள்.

பொங்கும் எழிற்சுடர்ப் பொன்மலைக் கொங்கைகள்
பூத்திடக் கோலமிட்டாள் - அன்று
சேர்த்திதழ் முத்தமிட்டாள் - மயில்
எங்கெங் கெனவின்று ஏங்குமெனக் கருள்
ஈயவு மேன்மறந்தாள் - துயர்
தோயவு மேன் விடுத்தாள்.

கார்முகிற் கூந்தல் கலைய அணைத்தமென்
காந்தள் விரல் நிலைக்கும் - நினைவினில்
சாந்தக் குரல் இனிக்கும் - நாடும்
கூர்விழி நோக்கைக் குலைத்தெங்கு போயினள்
கூடலின் முன்வெறுப்போ - இதுபுகழ்
ஊடலென்பார் சிறப்போ.

# சீதனம் ஏதுக்கடி?

கண்கள் கலந்திடக் கனவு சிறந்திடக்
காதல் பிறந்ததடி - வாழும்
காதல் பிறந்ததடி - அவள்
வெண்பல் தெரிந்திட வெட்கிச் சிரித்திட
வேட்கை மிகுந்ததடி - மோக
வேட்கை மிகுந்ததடி.

காலடி மெல்லிடக் காந்தள் விரல்படக்
கனகம் குவிந்ததடி - மாறாக்
கனகம் குவிந்ததடி - அவள்
நூலிடை தொட்டிட மின்னுடல் கட்டிட
நூறு பொன் பெற்றதடி - மனம்
நூறு பொன் பெற்றதடி.

அங்கம் அசைந்திட அழகு ஜொலித்திட
ஆயிரம் சேர்ந்ததடி - செல்வம்
ஆயிரம் சேர்ந்ததடி - அவள்
கொங்கை நிமிர்ந்திடக் கொவ்வை இதழ்படக்
கோடி நிறைந்ததடி - இன்பம்
கோடி நிறைந்ததடி.

முத்தும் உதிர்ந்திட முத்தம் சொரிந்திட
முற்றும் மகிழ்ந்ததடி - மனை
முற்றும் மகிழ்ந்ததடி - எழிற்
சித்திரத் தேர்தொடச் சீர்பெற வாழ்ந்திடச்
சீதனம் ஏதுக்கடி - பாழும்
சீதனம் ஏதுக்கடி.

- சிந்தாமணி -

# தனிமை எனை வருத்தும்

மாலைக் கதிர்தொடும் மேற்கினிலே - அவள்
மயக்கும் ஒளிச்சுடர் போலசையும்
நூலை நிகர்த்த இடைநினைக்கும் - மனம்
நுகரும் தனிமை தனில் தவிக்கும்.

தென்றல் தடவிடும் தித்திப்பிலோ - அவள்
தேக்கிய காதல் இசைபடிக்கும்
நன்றுயிர் ஒன்ற நலம்நினைக்கும் - கொடு
நஞ்சாய்த் தனிமை எனை வருத்தும்.

பாடும் அலைகடல் பார்த்திடிலோ - அவள்
பண்ணிசைத் தென்னுடல் தொட்டணைத்து
கூடும் எழிலின்பம் எண்ணிநிற்கும் - துயர்
கூட்டும் தனிமை உளந்துடிக்கும்.

வெள்ளை மணற்தரை மீதினிலே - அவள்
வேல்விழி தாக்கச் சிரித்திருக்கும்
கள்ள மௌனக் காதல்நினைவில் - நான்
களிக்கத் தனிமை எனைவருத்தும்.

கோலச் சுடர்நிலா கண்டிடிலோ - அவள்
கொஞ்சிக் கழித்திதழ் கூடிநின்ற
காலம தெண்ணி உளங்குளிரும் - வெளிக்
காட்சி தனிக்க மனங்கலங்கும்

- சஞ்சீவி -

# எல்லாம் உனக்காக

நிர்மலமாய் இருந்த மனம்
குப்பையாக
நீ இணைந்த வேளையெல்லாம்
நினைத்திருந்தேன்

தோல்விகளை எனக்காகச்
சேர்த்துக் கொண்டு
தொடருமெந்தன் வெற்றிகளை
உனக்குத் தந்தேன்

விடியாத பாழிருட்டில்
தவித்திருந்தும் - என்
வெளிச்சத்தை உன்னிடமே
கொடுத்து வைத்தேன்

என் துயரில் நீ களிக்க
எரியும் தேகம்
என்னுடைய தெல்லாமே
உனக்குத் தந்தேன்

பார்த்திருந்து நீ மகிழப்
பொழுது போக்கப்
பைத்தியமாய் ஆக்கினையே
பதற வைத்தாய்.

என் நினைவில் நீ
உனக்கு என்னைத் தந்தேன்
என் மரணம் உனக்கினித்தால்
அதுவும் இன்பம்

# தூரமைப் பீடி

ஊர்ச் சுவரில் படம் எழுதி
ஒட்டிவைத்த 'நோட்டீஸ்'
தார்ச் சந்தி வீதிதோறும்
தடம்பதித்த சின்னம்
வார்த்தைமிக ஜாலமிட்டு
வடித்தபல பொய்கைள்
சேர்த்தெடுத்துத் தேர்தலெனச்
செப்பிவரும் முகங்கள்.

நேர்த்திவைத்த கோயில்குளம்
நெல்வயல்கள் விட்டோம்
போர்த்துவம்சம் வீடிழந்தோம்
பொதிசுமந்து அலைந்தோம்
நீர்த்திவலை வார்த்த கண்கள்
நிதந்துயரில் தோய்ந்தோம்
பார்த்தெமக்கு ஒருகருணை
பகன்றமுகம் காணோம்.

என்றுமிவர் முகமறியோம்
எங்களின்முன் முதலாய்
இன்றுவந்து கரம்கூப்பி
இல்லையெனா தெல்லாம்
நன்று செய்வோம் என்றுரைத்து
நகைத்தணைத்துக் களித்து
வென்றுசபை ஏகுதற்காய்
வேண்டிவந்தார் ஓட்டு.

கானலினைக் காட்டியெமைக்
கடத்திவந்த பெரியோர்
மானமுள்ள தமிழரென
மார்தட்டும் வீரர்
போனமுறை தோற்றவரும்
பொய்யுரைத்த பேரும்
ஆனவரை தங்களுக்கே
ஆகுமென்று சொன்னார்.

வாக்குறுதி ஒப்புதல்கள்
வாசகங்கள் கோசம்
வாக்கெடுத்த பின்மறைந்து
வன்முறைக்குள் எம்மை
போக்காது போனாலே
போதுமையா பிச்சை
கேட்கோம் நாம் நாயைப்பிடி
கேடுதொட வேண்டாம்.

- தினக்குரல்-

# எழு தோழா

கண்ணினை விற்றெழிற் காட்சிகள் வாங்கிடும்
கருத்தற்ற மானிடர் இல்லை
தண்புனல் என்றசை கானலின் பின்னோடித்
தளர்ந்திடும் மூடர்கள் இல்லை
விண்பிளந் தேனுமிங் குள்ளவர் இன்புற
விடிவினைக் காண்பதிற் சூரர்
கண்பனி நீர்த்தொடர் துன்பத்திலே தினம்
கலங்கிடல் விட்டெழு தோழா.

நள்ளிரவில் விடி வெள்ளியைத் தேடிடும்
நாளறியார் இங்கு இல்லை.
வள்ளமிரண்டினில் கால்களை வைத்துழல்
வரண்ட நினைவினர் இல்லை.
உள்ளம் மகிழ்ந்திட உழைத்துயர் வோமெனும்
உறுதி மிகுந்த நற் தீரர்
வெள்ள மெனத்துயர் மேவிடினும் மீட்சி
வேண்டும் விரைந்தெழு தோழா.

துன்பம் தொலைக்கச் செயல்மறந் தூமையாய்
தூங்கிடும் ஏழைகள் இல்லை
அன்பு அகிம்சை அறநெறி என்றுவாய்
அரற்றும் மதியினர் இல்லை
இன்பம் தருமம் இதயக் கருணைமெய்
இன்செயல் ஆற்றிடும் வீரர்
வன்பகை தீய்ந்திட வாய்மை நிலைத்திடும்
வாழ்விற் களித்தெழு தோழா.

-ஈழநாடு-

# எண்ணீர் !

நெருப்பாய் எரிகிறது நெஞ்சம் - போர்
நீள்வதனால் கொடுந்துயரே இங்கெமக்கு மிஞ்சும்
உருப்பெற்று நிற்பதுவோ கொலைகள் - இந்த
உலகை அழிப்பதற்கே உரத்தொலிக்கும் விலைகள்

புண்ணுக்கு மருந்திடுவோர் இல்லை - கூடிப்
புண்வந்த காரணத்தைப் புலம்பிடுவோர் தொல்லை
எண்ணுக்குள் அடங்காத அழிவு - சுயம்
எல்லாமே தன்னலத்தைக் காப்பதிலோ தெளிவு.

கல்லிருந்து நாருரிக்க முயல்வோர் - தாம்
கற்றவர்கள் என்பதனை அரசேறின் மறப்பார்
நெல்விடுத்து உமி இடித்து மாய்வர் - உண்மை
நினைவகற்றி எத்தனை நாள் பொய்யிதிலே வாழ்வர்.

நஞ்சுறையும் கூடாக நெஞ்சம் - மக்கள்
நலந்தேட மறந்தயலைத் தீய்க்குமன வஞ்சம்
பஞ்சமுயர்ந் தழுதழுது கண்ணீர் - இந்தப்
பாரழிக்கும் படிபெருகும் வகையறியீர் எண்ணீர்.

- தினக்குரல்-

# பகை தொலைத்து, நீதி காப்போம்.

சென்றுவிட்ட நாட்களெல்லாம்
எங்கள் வாழ்வின்
சிறப்புரைக்கும் கண்ணாடி
மனிதன் பூவில்
நின்றிருந்து உண்டுறங்கி
ஆடிப் பாடி
நிலைத்திருக்கும் நாட்களென்ன
கோடி ஆண்டோ
இன்றிருப்பான் நாளையவன்
இல்லை யென்ற
இலக்கணமே மனிதனென்போம்
இதுவே உண்மை.

வாழ்பவர்கள் மானிடத்தின்
மகிமை தன்னை
வாழ்த்து தற்காய் வாழ்வதிற்தான்
வாழ்வு கோடி

தாழ்வுபட்டுத் தரணியெல்லாம்
அலைந்து சோர்ந்து.
தன்மானம் இழந்தடிமை
வேலை தேடி
மாழ்வதிலே மகிமையில்லை
எங்கள் மண்ணில்
மானமுடன் வாழ்வது தான்
மதிப்பும் மாண்பும்
கூழ்குடித்த போதுமன்பே
குறையாச் செல்வம்
குன்றனைய தியாகமதே
நிலைத்த வாழ்வு.
அஞ்சியஞ்சி அடிப்பவனுக்(கு)
அடிபணிந்து
அல்லலுடன் நீண்ட தினம்
வாழ்தல் கேடு
கெஞ்சியுயிர் நிலைத்துலகில்
கீழ்மை சூழக்
கீர்த்தியற்ற பொய்யுறவில்
மயங்கல் தீது.
துஞ்சுதலை நீக்கியெழு
மண்ணின் மைந்தர்
துலங்கநட விடிவு வரும்
துயர்கள் நீங்கும்
நெஞ்சுயர்த்து நிலை உணர்த்து
நிமிர்ந்து செல்வோம்
நெருக்குமெதிர்ப் பகை தொலைத்து
நீதி காப்போம்.

# நம்பி நிற்போம்

கடைத் தெருவுக் கென்றசைந்து போனோரெல்லாம்
கண் கலங்க ஓடிவந்தார் அவல ஓலம்
விடையெழுதப் பரீட்சைக்குப் போனோர் குண்டு
வெடிகேட்டு ஓடி வந்தார் கதிகலங்கி
கொடையருளக் கும்பிட்டோர் கோயில் விட்டே
குலை நடுங்க ஓடிவந்தார் ஆனால் நீதிப்
படை நடத்திப் போனதுணை வீரரெல்லாம்
பயமகற்றி மீண்டிடுவார் நம்பி நிற்போம்.

காரேறிப் போனாரெம் அருமை மைந்தர்
கல்வி கற்றுத் திரும்பிவரக் காணோம் வாழ்ந்த
ஊருக்குப் போனாரெம் உற்றார் பெற்றோர்
உயிரோடு திரும்பிவர காணோம் எங்கும்
யாராரோ போனாரப் புனிதரெல்லாம்
யாமறியத் திரும்பிவரக் காணோம் நீதிப்
போருக்கே போனாரெம் இனிய தோழர்
புயலெனவே அவர் வருவார் நம்பிநிற்போம்.

வீடெரிந்து பொருளிழந்து ஓடியோடி
விதவைகளாய் அகதிகளாய் வந்தார் கூடி
காடொளிந்து சுகமழிந்து உயிரைக் காக்க
கவலை மிக ஓடி வந்தார் அமைதியில்லை
தேடரிய சுதந்திரத்தின் உண்மை தன்னை
தேடியிவர் ஓடுகின்றார் அமைதிநீதி
நாடித்தான் போனாரெம் அறிவுத்தோழர்
நாடுயரத் திரும்பிடுவார் நம்பி நிற்போம்.

ஈழநாடு.

# நியாயமுண்டோ

கோல மனை குடிசை
கூடி உழைத்த வயல்
சாலை எழில் சிதைத்து
சண்டாளர் இங்கு வரப்
பாலமுதம் உண்டு இசை
பாடுதற்கு நேரமுண்டோ

வளரும் பொருள் கருக்கி
வாழ்வின் மகிழ்வழித்து
ஈழத் தமிழ் நிலத்தை
எரியூட்டும் பாவிகளை
அழியாமற் கண்களிவை
அயர்ந்துறங்க நேரமுண்டோ

பிஞ்சு மழலைகளைப்
பெண்ணினத்தை மூத்தோரை
நஞ்சரிவர் குண்டெறிந்து
நாளும் உயிர்பறிக்க
அஞ்சிப் பதுங்கிநிதம்
அழுதிருக்க நியாயமுண்டோ

எதிரி கணையெறிந்து
எம் நிலத்தில் கால்பதிக்க
சதி செய்யும் வேளையிலே
சப்பாணி கட்டியிங்கு
புதிர்போட் டயர்ந்திருந்து
பொழுதோட்ட நியாயமுண்டோ.

# மக்கள் மகிழக் காண்போமா?

அவனும் அவளும் நேற்றிங்கே
அழிந்தார் மறைந்தார் சிறுகதையாய்
இவனும் இவளும் இன்றைக்கோ
இறந்தார் முடிந்தார் ஒருகவியாய்
கவனம்! நானும் நீயும் ஓர்
கனவாய் நாளை முடிந்திடலாம்
புவனம் நிறைந்த பேய் ஆட்சி
புலம்பும் மக்கள் துயர்க்காட்சி

நீதி என்றோ செத்ததன்
நினைவும் அழிந்த தெம்நடுவில்
வீதி எங்கும் இயமர்வலம்
விஞ்சும் சதியின் பொய்யோலம்
ஆதி வாழ்வாய் அகதிகளாய்
அடிமை நிலமோ எம்முரிமை
சேதி நாளும் பிணக்குவியல்
செய்வ தறியா மனச்சுமைகள்

எங்கும் கண்ணீர் நிலைத்திடுமோ
எவர்க்கும் அமைதி குலைந்திடுமோ
பொங்கும் மனங்கள் புதுவாழ்வை
புத்தன் உரைத்த சத்தியத்தை
இங்கே காணத் துடிக்கின்றோம்
இன்றும் என்றும் தவிக்கின்றோம்
மங்காப் புகழ்சேர் எம்மண்ணில்
மக்கள் மகிழக் காண்போமா?

# வசந்தம் பிறக்காதோ?

விரிந்த வெளிபடர்ந்த வானம் - நிலா
விளங்க ஒளி சொரியும் நேரம் - சுற்றித்
திரிந்து களித்திருந்த கோலம் - எங்கு
தொலைந்து கடந்ததந்தக் காலம்.

பரந்த கடற்கரையின் ஓரம் - அலை
பாயும் மணல்தழுவும் ஈரம் - ஒன்றி
இருந்து கதைபகிர்ந்த மாட்சி - இன்று
இல்லைக் கடந்ததெங்கக் காட்சி.

காந்தம் மெய்க்காதலுயிர் வாழும் - இரண்டாம்
காட்சிப் படஞ்சுவைத்து மீளும் - இருள்
நீந்தத் துணிவுறுதி கூட்டும் - அந்நாள்
நினைவில் துயர்பெருக வாட்டும்

பங்கமிலா உறவுத் தருணம் - அன்று
பாடிக் கலந்துமகிழ் பயணம் - எங்கும்
தங்கிப் பழகுமெழில் மக்கள் - இன்று
தடைகள் பயமுறுத்தும் சொற்கள்.

அந்த இளமைநலம் தூண்டும் - நன்நாள்
அமைதி வளம்பிறக்க மீண்டும் - இங்கு
வந்து பிறக்காதோ வசந்தம் - உயர்ந்த
வாழ்வை அமைக்காதோ சொந்தம்.

# பிள்ளையார் வேண்டும்.

பிள்ளையார் பிடித்தோம்
குரங்குகள்தான் வந்தன
இப்பொழுது
குரங்குகள் தான் பிடிக்கின்றோம்
ஏனென்றால்
எங்களுக்கு ஒரு
பிள்ளையார் வேண்டும்.

**திசை - 15.09.89**

## விளையாட்டு

அழப்பிக் குழப்பி
முதலிலிருந்து தொடங்குவோம்
அழப்பி அழப்பியே
விளையாட்டின் விதிகளையே
குழப்பி விட்டோம்
வெற்றி எங்களுக்குக்
கிடைக்கும் வரை
அழப்பிக் குழப்பியே
விளையாடுவோம்.

திசை 04.08.89

## அடையாளங்கள்

அறிமுக அட்டைகள்தானா
அடையாளம் காட்டுகின்றன
சவமணிந்த சட்டைகளுந்தான்
அடையாளம் காட்டுகின்றன.

அடையாளம் தெரியாமல்
முகங்கள் கருக்கப்பட்ட
பிணங்களிலும்
மனித நேயமற்றோர்
மறைக்க முயன்ற
மாநிசங்களின்
அடையாளங்கள் தெரிகின்றன.

**திசை 03.11.89**

# அவனும் நீயும்

கோரப் பற்களைத் தொலைத்து
கொடிய கண்களை மறைத்து
அவன் இப்போது
தோற்றத்தில் உன்னைப் போல

பாசக்கயிற்றை
எருமைக் கடாவை
எல்லாமே விலக்கி விட்டு
உன்னோடு உன்னவன் போல்

வீதிகளில் சாக்கடையுள்
அவனால்
உயிர் பறித்து வீசப்பட்ட
வெற்று உடம்புகள்
யாரது வேள்விக்கு
இரையிடுகின்றன.

பாதையைச் சுருக்கி
பயணத்தை நெருக்கி
பூமித்தாய் மடியில்
நரகத்தைப் பெருக்கி

அவனாக நீயும்
நீயாக அவனும்
கோரப்பற்களை தொலைத்து
கொடிய கண்களை மறைத்து
கால தேவராய்
நீயும் அவனும்

நவமணி 19.01.1997

## சந்தேகம்

இப்பொழுது எனக்கு
உன்மீதும் சந்தேகந்தான்

சாத்தான்களோ
வேதம் ஓதுகின்றன
கடவுளோ கண்மூடி
மௌனியானார்

இப்பொழுது எனக்கு
என்மீதும் சந்தேகந்தான்

திசை 30.03.90

# மரண பயம்

என் பாதையில்
அவர்கள் என்னைத்
தடுத்த போது
என் வார்த்தைகள்
தடுமாறின

சுதந்திரமாம்
குறட்டையிலும்
என் மொழியை
உச்சரிக்காத படி
எச்சரிக்கையுடன்

இது
என் தாய் நாடு
என் தேகம் நிலைக்க
நடுங்கியது

சுதந்திரமாய்
என்னைச் சூழ்ந்திருப்பது
மரண பயம்

தினமுரசு மே 17.1998

# அமைதியைத் தேடி

அமைதியைத் தொலைத்து விட்டு
அதனையே தேடச் சொல்லி
எங்களை இழுத்துக் கொண்டு.....
இந்த இரைச்சலுக்கிடையே
நாங்கள் இடிபட்டு நெரியுண்டு
இழுபட்டு மிதியுண்டு
எஞ்சி நின்ற
கொஞ்ச மன அமைதியையும்
தொலைத்து விட்டோம்.

வேட்டுச் சத்தங்கள்
மரண ஓலங்கள்
முகாரி இராகங்கள்
விடிய விடிய
அவல ஒப்பாரிகள்
பழகிப் போச்சு
இருந்தும்
அமைதியென்றால்
என்றென்று கேட்டே

அடம் பிடிக்கும்
என் இளைய மகனுக்கு
அமைதியின் இனிமையை
அமைதியை அமைதியை
அமைதியின் அர்த்தத்தை
தேடிக் கண்டடைய - வழி
காட்டத்தான் துடிக்கிறேன்.

**திசை 23.02.[illegible]0**

# யாரழுவார்கள்

மலர்கள் கருகி
மனிதம் தொலைந்து
புலரும் ஒவ்வொரு பொழுதும்
இங்கே
யாருக்காக யாரழுவார்கள்?

இரவும் பகலும்
இரவியும் நிலவும்
உலகம் ஒன்றென
உணர்த்தி ஒளிரும்

மரணமும் ரணமும்
மனங்களைக் கலக்கும்
ஒருகணம் பொய்மையின்
உண்மையை விளக்கும்

வாழ்வெது
என்பதோர்
கேள்வியுள் உலகம்
போர் சமாதானம்
பொருதும் பொருதும்
விடுகதை இதனை
விடுவிப்பவர் யார்?

மலர்கள் கருகி
மனமும் சிதைந்து
உலரும் புவியே
உனக்கென இங்கே
யாரழுவார்கள்?

நவமணி 01.12.96

# பாதைகள் மாறி

பாதைகள் மாறி
இருண்டன
வௌவால்களாகி
வளி கிழித்து
திசை தேடி
வசந்தம் நாடி
நகரும் காலங்கள்

உலகமோ
விரிந்து பெரிதாக
எங்கள் ஊர்களோ
சிறிதாய்
மிகவும் சிறிதாய்
எல்லைக் காவல்களால்
இறுகும்

மூச்செடுக்க
அனுமதி அட்டைகளுக்காய்
நீளும் வரிசைகள்
நிரல்களாய்
நிரைகளாய்
நிம்மதியைக் குலைத்தபடி
பாதைகள் மாறி
இருண்டன.

தினக்குரல் 05.10.97

# அந்த ஒலி

நாய்கள் குரைக்கும்
நரிகளோ ஊளையிடும்
பன்றி உறுமும்
பரிகளோ தாம் கனைக்கும்

காகம் கரையும்
கவின் குயில்கள் கூவி நிற்கும்
கோழிகளோ கொக்கரிக்கும்
குருவிகளோ கீச்சிடுமா

சிங்கங்கள் கர்ச்சிக்கும்
சிறுத்தைகளோ விழித்துறுமும்
யானை பிளிறும்
யாவுமிசைப் பண் ஒலிக்கும்
ஆனால்..............!

இவர்களிங்கே
பேசுகிறார், பாடுகிறார்
பிதற்றுகிறார்
கத்துகிறார்.

உணர்வு பல மேலோங்க
உறுமுகிறார், சீறுகிறார்

கர்ச்சித்தல், ஊளையிடல்
கரைதல் ரீங்காரமிடல்
கூக்குரல்கள், கொக்கரிப்பு
கூடும் கனைப்பொலிகள்

யாவுமாய் நிற்குமிவர்
யாரோ! சிறப்பெதுவோ
இந்த உயிரினத்திற்கு
ஏது சிறப்பு ஒலி

**நவமணி 20.06.97**

# அழுவதற்கு ஒரு பொழுது

அழுவதற்கு ஒரு பொழுது
அமைதி வேண்டும்
பழுதறவே என் துயரப்
பாரம் நீங்க,
அழுவதற்கு ஒரு பொழுது
அமைதி வேண்டும்.

இருள் மயக்கும்
இடி இடிக்கும்
பொருள் புரியாப்
போர் முழக்கம்
பொழுதைச் சாய்க்கும்

விழுதெறிந்து
தீவினைகள்
விலங்கு பூட்டும்
விடுதலைப் பூக் கல்லறைகள்
விதைகள் தேக்கும்

புதைகுழிகள்
சிதைவுடல்கள்
புலங்கள் தோறும்
பொருந்தாத நீதி வலம்
பொய்மைக் கோலம்

எதை விரும்பி
வாழ்வதென
இதயம் ஏங்கும்
எங்கே நல் மனிதமென
விழிகள் தேடும்

பழுதறவே என் துயரப்
பாரம் நீங்க
அழுவதற்கு ஒரு பொழுது
அமைதி வேண்டும்.

அமுது ஜூலை 1999

# பொய் இதற்கு மெய்யென்று

பொய் இதற்கோ
மெய்யென்று
பெயர் சூட்டினார்கள்
புரியாத போர்ச் சுமைக்குள்
உயிர் போக்கினார்கள்.

வகை தொகை ஏன்?
பலியானோர்
எல்லோரும் மனிதர்
வையகமே பொய்
எதற்கு
வாய்ச் சொல்லில் வீரம்

மெச்சுதற்கோ
உயிர் பறிப்பு
மெய் சிலிர்க்கும்
தொகைகள்
இறந்தவரைக்
கணக்கிட்டேன்?
எவர் உயிர்த்தார்
உலகில்?

நிசமெல்லாம்
எரியுண்டு
நீறான பின்னே
தசமென்ன,
சதமென்ன,
தாழ்வுயர்வு ஏது?
பொய் இதற்கு
மெய் யென்றோ
பெயர் சூட்டினார்கள்

**தினக்குரல் 30.11.97**

## சாகவில்லை

கனன்றிடும்
"ஷெல்" வீச்சுள்ளே
குமைந்திடும்
மனங்களோடு
தண்டமும்
தாழ்வும் கூட
தனித்து மெய்த்
தடம் விலத்தி
நான் இன்னும்
சாகவில்லை

நீதியை
இரக்கம் நேர்மை
நிலைத்து வாழ்
உறவைச் சூழ்ந்து
வேதனை

விரக்தி பொய்மை
விரட்டிய போதும்
அஞ்சி
நான் இன்னும்
சாகவில்லை.

கூடு விட்டு
அலையும் குஞ்சாய்
வீடுநல் வாசல் நீங்கி
விதியென
வாழ்வை நொந்து
நான் இன்னும்
சாகவில்லை

இழந்தவை
ஏதுமில்லை
இருந்ததென்
உயிரே உன்னை
இழந்திடில்
இருப்பதென்ன?
உரிமையாய்
உறவாய் என்னோடு
ஒன்றிய
உன்னைக் காத்து
விளைந்திடும்
வெற்றி நோக்கி

விருப்புடன்
இருக்கிறேன் நான்
இன்னமும்
சாகவில்லை

**தினக்குரல் 19.04.98**

# உயிர்த்தெழுவர்

இன்றைக்கோ
நிச்சயமற்று இருக்கிற
ஊனுடம்பு

நாளைக்கும்
வாழ்வதற்காய்
நலந்தேடும் அர்ச்சனைகள்

என்றைக்கும் நிலைக்காத
எண்சாண்
உடல் சுமப்போர்

கொன்றவர்கள் ÷ கொலைகாரர்
கூட்டுவரோ
வாழ் நாள்கள்

பொய்யிவற்றை மெய்யென்று
புகழ் தேடிக் கல்லறைகள்
புவி நிறையக் கட்டுவதோ
காலம்.

என்றிவர்கள்
மெய்யுயிர்ப்பர்
நன்றறிவர் சென்றவர்கள்
நமக்கும் அது வழியே
என்றறிவர். மெய்யுணர்வர்.
அன்றே விழி பெறுவர்
அவரோ உயிர்த்தெழுவர்.

நவமணி 23.02.97

# ஆச்சியின் திறப்புக் கோர்வை.

ஆச்சி திறப்புக் கோர்வை
அதிலோ மிகக் கவனம்
மூச்சிருக்கும் வரை அதனை
மூடி வைத்துக் காத்திருந்து
ஆச்சி திறப்புக் கோர்வை
அதிலோ மிகக் கவனம்.

பூட்டிப் பலமுறைதன்
பூசை அறைக் கதவை
தள்ளி இழுத்துச்
சரிபார்த்து வந்த கதை
சொல்லிப் பெருமையுறும்
ஆச்சி திறப்புக் கோர்வை
அதிலோ மிகக் கவனம்.

மூச்சு விடவில்லை
மூடி வைத்த வீடு அங்கே
காணாமற் போன கதை
கடைசிவரை இங்கெவரும்
மூச்சு விடவில்லை
ஆச்சி திறப்புக் கோர்வை
அதிலோ மிகக் கவனம்.

தினக்குரல்.

# ஒற்றுமை

விறகுக் குச்சிகள் ஒன்றிவிட்டால்
ஒடிக்கவே முடியாது
பறவைக் குஞ்சுகள் ஒன்றுபட்டால்
பிடிக்கவே முடியாது.

ஒற்றுமையின் உயர்வோ
வெற்றியின் மூலவேர்

பள்ளியிற் படித்த
பழைய கதைதான்
சொல்லிச் சொல்லியே
ஆச்சியும் சோர்ந்து போனா.

அண்ணன் தம்பிக்குள்
அடிதடிகள் கெடுபிடிகள்
இப்பொழுது
ஒற்றுமையின் உயர்வைப் பேசும்
அந்தக் கதைகளுடன்
அடுத்த வீட்டுக்காரன்

**திசை 1987**

# நெஞ்செலாம் கோயிலிட் டமர்வர்

பகையழித் துயர்ந்து படைநடு மிளிர்ந்த
பாட்டுடைப் போர்த்தலை மறவன்
தொகை தொகை வெற்றி தொடர்ந்திட விளைந்த
தோள்வலு மிகுந்தமா வீரன்
தகைமைகொள் தமிழோன் தாய்நிகர் மண்ணில்
தன்னுடல் வீழ்த்தியோ மகிழ்ந்தான்
நகைதரு முகத்தோன் நல்லுளன் எங்கே?
நவில்கவென் றெவருமே கேட்பின்!

திசைகெட எட்டுத் திக்கினும் சிதறித்
திகைத்தொளித் தோடிய பகைவர்
வகைகெடத் திரும்பிப் பார்த்தயர்ந் தார்த்த
வகையினால் மார்பிலே புண்கள்
அசைவுறத் தாங்கி வீழ்ந்தனன் செம்மண்
அதிர்ந்தது அழுதது புவனம்
இசைபெறும் வீரன் இல்லையென் னாது
இருக்கிறான் எங்கணும் நிறைந்தான்.

கலைவுறு கைவேற் கலங்களும் நொருங்கிக்
களத்திடை வீழ்ந்திடப் பொய்யாய்
அலைவுறு மெய்யும் அதனுறை உயிரும்
அகன்றது ஓரிடத்தில்லை
விலைதரு வீரம் விளைத்தமா வெற்றி
விடுதலை உணர்வுசேர் திண்மை
நிலைபெற வாழ்ந்தான் நீடுவாழ் புலவோர்
நிதம்புகழ் வாய்மொழி அமர்ந்தான்.

கொடுமையின் பிடியில் குமைந்திடும் தாய்மண்
கொண்டபோர்க் குயிருடல் ஈந்தோர்
விடுதலை வேட்கை வித்தெனப் புதைந்தோர்
விளங்கிடு தாய்நிலத் தொளிர்வர்
படுவதே இல்லை அவர்திறன் புகல்வர்
பசுமையாய் இளமையாய் வாழ்வர்
நெடுந்தொகை நாட்கள் நீள்நிலம் சிறக்க
நெஞ்செலாம் கோயிலிட் டமர்வர்.

**கவின்தமிழ் 2001**
**புறநானூறு 282 செய்யுள்**

# பூதலம் அவரால் வாழும்

சினமது அறியாச் செய்கை
சிறப்பெலாம் பொலிய ஆளும்
மனமது நன்மை கொள்ளும்
மதுரமும் பகிர்ந்து உண்ணும்
கனமிகு கருத்தோ டொன்றிக்
களித்திடும் புனிதர் கூடத்
தனமெலாம் பொதுவென் றாகத்
தம்மையே கொடுக்கும் மேலோர்

நிலமிது முழுதும் தந்தும்
நீதியைப் பழிக்கா மாந்தர்
நிலமிதில் நிலைக்கும் தோறும்
நிமிர்ந்தது மனிதம் என்போம்
உலகிது நீடு வாழும்
உறுதியும் உயர்வும் சேரும்
உலகிதைப் புதுக்கி ஆளும்
உண்மையும் அவரால் என்போம்.

மதிபலம் மிகுந்த வீரர்
மற்றவர் உயரத் தம்மை
எதிலுமே துணியும் நெஞ்சர்
எள்ளளவேனும் அச்சம்
விதியெனக் கொள்ளார் சோம்பி
விழுந்திடார் வெற்றி சேர்க்கும்
புதிதவர் சிந்தை இந்தப்
பூதலம் அவரால் வாழும்.

புறநானூறு 182 செய்யுள்.

# உவகையோடு
# அவன் செல்ல விடுக.

நெருப்புமிழ் கண்கள் நெஞ்செலாம் புண்கள்
நெடிதுநேர் நிமிர்ந்தசீர் தோளோன்
வரிப்புலிக் கவசம் வரிந்தவன் வந்தான்
வருபவன் யாரென அயர்ந்தார்.

சூழ்படை துலங்கச் சுடர்விடு மதியாய்
சோதியாய் ஒளிர்ந்தமன் வீரன்
ஆழ்கடல் நடுவண் அசைந்திடும் படகாய்
ஆர்த்தெழும் படைநடு மிளிர்ந்தோன்.

புரிதிறம் போற்றும் புரவலர் களத்தில்
பொருதுநின் றுயர்வுறு காலை
கரிமதம் கொண்டே களத்தினில் ஆடக்
காயமது உற்றுடல் நொந்தான்.

மயிலினம் ஆடி மகிழ்ந்திற குதிர்க்கும்
மண்பயிர் செல்வமோ குவிக்கும்
அயர்விலா துழவோர் ஆக்கமோ டுழைப்பில்
அகமகிழ்ந் தமுதுகண் டுவக்கும்

கள்ளொடு துள்ளும் கயலொடு சுவைத்தேன்
களித்திட வாழ்நில மறவன்
உள்ளமோ வெற்றி உறுதியோ மேன்மை
உவகையோ டவன் செல்ல விடுக.

புறநானூறு செய்யுள் - 13

# வென்றது புகழ் விளை தமிழே!

ஆரமாய் வெண்பூ அடுக்கிய வகையாய்
அமைந்தமென் கட்டிலின் மீதோ
வீரமா முரசம் விளங்கிடக் காணேன்
விருப்புடன் இருந்திடக் களைப்பால்
சோருமென் உடலம் சுகம்பெறு மயக்கம்
சொர்க்கமாய் ஆனதென் தூக்கம்.

வெற்றியின் சிறப்போ விளக்கிடும் கொற்றம்
வேந்தனாள் வீரத்தின் முரசம்
பற்றிடும் கட்டில் பணிந்தவை பரவும்
படியுயர் வுற்றபே ரிடத்தே
நற்றமிழ்ப் புலவன் நான்துயில் கொண்டேன்
நடப்பவை அறிந்திலேன் அடியேன்.

வாள்பொரு தெதிர்த்து வரும்பகை தொலைத்து
வலிமையாள் கரத்திலோ கவரி
நீள்துயில் கலையா திருந்திட வீசி
நின்றனை வேந்தனே விழித்தேன்
வாழ்கநின் கொற்றம் வாழ்க நீ மன்னா
வாழ்கசெந் தமிழ்மொழிப் பற்று.

உயர்ந்தனை கற்றோர் உடைத்தவர் பெருமை
உலகத்து வாழ்விலோ மகிமை
நயந்தனம் மகிழ்ந்தே தமிழறிந் தோர்தம்
நலத்திலே கருத்துடன் இருந்தாய்
வியந்தனம் நின்கை சாமரம் வீசி
வென்றது புகழ்விளை தமிழே!

புறநானூறு செய்யுள் - 50

# எண்ணம் கொடிது செயல் வலிது

நின்று களத்தினில் நேரெதிர் யானையை
வென்று மடிந்தனன் தந்தையவன்
நன்றவள் நாயகன் ஆநிரை காத்த மன்
சென்று பகையழித்தே இறந்தான்

இன்று ஒலித்தது மீளவும் போர்ப்பறை
நின்றது இல்லையப் போர்க் கொடுமை
என்று துணிந்தவள் தன்சிறு மைந்தனை
அன்று களத்திற் கனுப்பநின்றாள்.

எண்ணெய் தடவித் தலைசீவி எழில்
வெண்ணுடை போட்டுக்கை வேல்கொடுத்து
நண்ணுக போர்க்களம் என்று விட்டாளவள்
எண்ணம் கொடிது செயல் வலிது.

ஒரே மைந்தனை உறுத்தும் பகை வெல்ல
போரேக வென்றே விடுத்த பெண்மை
யாரே துணிந்திடல் கூடும் மறக்குடி
ஊரே நடுங்கும் அவள் செயலால்.

**புறநானூறு 279 செய்யுள்.**

# தத்துவஞானி

## பேனாட்ஷா

ஆங்கிலத் தாய்மொழிப் பேரறிஞர் - கொடை
ஆர்வம் மிகுந்திட்ட நல்லறிஞர்
பாங்கொடு பேர்புகழ் சூழ்ந்துயர - வளர்
பண்பொடு வாழ்ந்தவர் பேனாட்ஷா.

பூண்ட புலமை கடமை நலம் - ஜெகம்
போற்றிட வாழ்ந்த கலைக்கோலம்
ஆண்டொரு பதினெண் ணாயிரத்து - ஐம்பத்(து)
ஆறிற் பிறந்தவர் பேனாட்ஷா

பள்ளிப் படிப்போ சிலகாலம் - ஒளி
பரவிடக் கற்றதோ ஊருலகம்
உள்ளந் தெளிந்த நகைச்சுவையும் - விளை
ஊக்கமும் மிக்கவர் பெனாட்ஷா.

வித்தகர் வீரர் விருது பெற்றார் - நல்ல
விமர்சகராகவும் பேறு பெற்றார்
தத்துவ மேதை இலக்கியத்தூண்-கற்றோர்
தாரணி போற்றிடும் பேனாட்ஷா.

நோக்குயர் நாடகம் செய்துயர்ந்தார் - வல்ல
நோபல் பரிசையும் பெற்றுயர்ந்தார்
ஆக்கம் அறிவு நிறைந்தொளிர - இந்த
அகிலம் பெருமை செய் பேனாட்ஷா.

# பாரத நாடு தந்த கவி பாரதி

பாரதி செந்தமிழ்ப் பாட்டிசைத்தான் - வீர
பாரத நாட்டிடர் போக்க நின்றான்
வீர சுதந்திரப் போர்க்கவிதை - வல்ல
வீரர் புறப்படச் சூளுரைத்தான்.

அஞ்சி நடுங்குதல் இல்லையென்றான் - பகை
அஞ்சு பத்தாயினும் அஞ்சேலென்றான்
கொஞ்சி மழலைகட் அன்பு செய்தே..... - இசை
கொஞ்சும் தமிழில் புதுமை செய்தான்.

பாட்டிற் புரட்சிக்குப் பாதையிட்டான் - தளர்
பாட்டிக்கும் நெஞ்சுரம் ஊட்டி நின்றான்
கூட்டியே கண்ணனாய்ச் சேவகனாய் - மெரு
கூட்டித் தலைப்பாகை பொட்டணிந்தான்.

வந்தே மாதரம் என்றெழுந்தான் - சக்தி
வந்தருள் செய்திட ஆர்ப்பரித்தான்
செந்தேன் சிந்தும் மொழி சிறந்தே - வளர்
செந்தமிழ்த் தாயின் புகழடைந்தான்.

# விளக்கு

முகிழ்க்கும் கவிதையிலே
முறுவலிப்போன் நறுங்கவிஞன்
பிறக்கும் சிறுகதைக்குள்
பேசுபவன் எழுத்தாளன்
உயிர்க்கும் கலை எண்ணங்கள்
உலகிருளை ஓட்டி ஒளி
விரிக்கும் வழிகளெல்லாம்
விளக்குபவன் ஆசிரியன்

பள்ளியிலே வண்ணமிடும்
பாலகர்கள் கற்பனைக்குள்
துள்ளிக் குதூகலிக்கும்
தூய்மை நிறை இலட்சியங்கள்
வெள்ளம்
அவை பெருக விளக்கி
விளங்கி நிற்கும்
விளக்கு - விரிகதிரோன்

புது ஊற்று
1998 ஜீலை -செப்டெம்பர்.

# தியாக தீபம்

விடுதலைக்குரமிடும் வீச்சொளி
உலகெலாம்
வியந்திடும் தியாக தீபம்
கொடுமுடி அரசெலாம்
குலைத்திடும் வகை தொடர்
கொழுந்திடும் புரட்சி வேகம்.

வெற்றியின் உச்சியில் வீற்றிருந்
தொளியுமிழ்
வேங்கையுன் அஹிம்சை யாகம்
பற்றுடை வீரராற் பகைதொலைத்
தெழுந்தமண்
பாசத்தே உயர்ந்த தாகம்.

காலமோ போற்றிடும் கருத்தினில்
விளங்கிடும்
காற்றிசை உனது நாமம்
சீலமிக் கெமதுமண் சிரித்திடும்
போதெலாம்
சிந்தையில் மிளிரும் தியாகம்.

# நன்றி

ஈழநாடு.
ஈழநாதம்.
சஞ்சீவி.
சிந்தாமணி.
வீரகேசரி.
தினகரன்.
தொழிலாளி.
தேசாபிமானி.
யுவசக்தி
தினக்குரல்.
தினபதி.
வசந்தம்.
கலைவாணி.
திசை.
தினமுரசு.
சிரித்திரன்.
பூபாளம்
புதுஊற்று.
விளக்கு.
அமுது.
அர்ச்சுனா.
களனி
நவமணி.
முரசொலி.
மித்திரன்.
வெளிச்சம்.
கதிரவன்
பெயர்

நெடுந்தீவு சிறந்த கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் தன்னகத்தே கொண்டிருந்த கிராமம் என்பது அதன் வரலாற்றைத் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழர்களுடைய பாரம்பரியக் கலைகள் அங்கு பேணப்பட்டு வந்தன என்பதற்கு வெடியரசன் காத்தவராயன் போன்ற கூத்துகள் உட்பட வேறும் பல கூத்துகள் அங்கு நடைபெற்று வந்துள்ளமை அறியப்பட்டுள்ளது.

இந்த நூலாசிரியர் மகேஷின் தகப்பனார் ஒரு சிறந்த நாடகக் கலைஞர். இவரும் ஒரு நல்ல நாடகக் கலைஞர் என்பதுடன் சிறந்த எழுத்தாளராகவும் தன்னை வளர்த்துக் கொண்டவர்.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் மகேஷ் ஆரம்பக் கல்வித்துறை சார்ந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும், ஆரம்பக் கல்வி விருத்திக்கான பணிகளிலும் முன்னின்று உழைப்பவர் என்பதை எமது கல்வி உலகம் நன்கறியும்.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக கவிதைகள், கட்டுரைகள்,கதைகள், போன்ற தனது ஆக்கங்களின் மூலம் பல்வேறு பகுதிகளிலும் அறிமுகமானவர். இன்று வெளியாகும் பெரும் பாலான பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளி வருவதைக் காணலாம்.

இந்நூல் இவரது முதலாவது வெளியீடாகும். கவிதைகளில் யதார்த்தமும் எளிமையும் இளையோடுகின்றன. நெடுந்தீவின் மூத்த கலைஞர் என்ற வகையில் உறவுக்கு அப்பால் நின்று அவருடைய இலக்கியப் பணியை நோக்குகின்றேன் அவரது நூல் குறித்து விமர்சனம் செய்யும் அளவுக்கான தகுதி என்னிடத்தில் இல்லை எனினும் தமிழ் இலக்கியப்பரப்பில் "மனிதத்தைத் தேடி " என்னும் கவிதைத் தொகுப்புக்கு நிச்சயமாக சிறந்த இடம் உண்டு என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

– நெடுந்தீவு லக்ஸ்மன் –